பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 12 | வியாழக்கிழமை 25.01.2018 | கதிர் 81

### வாக்களிப்பின் போது அலைபேசியை பயன்படுத்தத் தடை

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களுக்குள் அலைபேசிகளைப் பயன்படுத்துதல், வாக்குச்சீட்டுக்களைப் புகைப்படம் எடுத்தல் என்பவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். பக்கம் 18 >>>

# புங்குடுதீவில் பாடசாலைக்கு சென்ற சிறுமியை மோதித்தள்ளிக் காவு கொண்டது கடற்படை பவள்





(எஸ்.நிதர்ஷன் )

யாழ்ப்பாணம் – புங்குடுதீவு வைத்தியசாலைச் சந்தியில் – புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கு அருகில் – கடற்படையின் பவள் வாகனம் மோதி பாடசாலை சிறுமியொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 9 வயதான திருலோகன் கேசனா என்ற சிறுமியே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் தனது மாமனாருடன் புங்குதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு பக்கம் 18 >>>



# மைத்திரியும் ரணிலும் இணைந்து செயற்பட்டால்தான் தீர்வு சாத்தியம்



இந்தோனேசியத் தலைவருடன்

## சிங்கப்பூர், இந்தோனேசிய நாடுகளின் தலைவர்களுக்கு சம்பந்தன் விளக்கம்

கொழும்பு, ஜனவரி.25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து செயற்பட்டால் மட்டுமே இனப் பிரச்சினைத்தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கம் சாத்தியம் என்று குறிப் பிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், இந்த விடயத்தை நேற்று தம்மைச் சந்தித்த சிங் கப்பூர் பிரதமரிடமும், இந்தோ னேசிய ஜனாதிபதியிடமும் நேரில் எடுத்து விளக்கினார். பக்கம் 04 >>>



சிங்கப்பூர்பிரதமருடன்

## ரவியின் விசேட உரைக்கு தடை போட்ட சபாநாயகர்



கொழும்பு, ஜன. 25

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றில் விசேட உரையொன்றை நிகழ்த்துவதற்கு முன்னாள் நிதி அமைச்சரும் நாடாளுமன்ற பக்கம் 18 >>>

## கூட்டமைப்பின் வேட்பாளர் மீது யாழ்.பண்ணையில் தாக்குதல்!



யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அத்தியடி (15 ஆம்) வட்டாரத்துக்கு போட்டியிடும் வேட்பாளரான முத்துக்குமாரு உதயசிறீ நேற்று பக்கம் 18 >>>

## இரு ஆணைக்குழுக்களினதும் அறிக்கைகளும் பெப்.20, 21 இல் நாடாளுமன்றத்தில் விவாதிப்பு

கொழும்பு, ஜன. 25

பிணை முறி விற்பனை மோசடி மற்றும் கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடிகள் ஆகியன தொடர்பில் விசாரணை செய்ய ஜனா பக்கம் 18 >>>

## அறிக்கையில் சில பக்கங்களை மறைத்து விட்டாராம் மைத்திரி

### எதிர்க்கட்சிகள் சபையில் குற்றச்சாட்டு


கொழும்பு, ஜன. 25

சர்ச்சைக்குரிய பிணை முறி அறிக்கையில் 6 ஆயிரம் பக் கங்கள் வரை காணப்பட்டன எனவும் சில பக்கங்களை வெளியிட்டால் குற்றவாளிகளுக்கு எதிராகச் சாட்சியங்கள் திரட்டவும் சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் முடியாது போகும் பக்கம் 18 >>>

## தேசிய அரசு நீடிக்கிறதா? சபையில் மூண்டது சர்ச்சை

கொழும்பு, ஜன. 25

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்த தேசிய அரசு நீடிப்பதற்கான உடன்படிக்கை கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்த நிலையில் புதியஉடன்படிக்கைஏதும் பக்கம் 18 >>>




தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்றின் முக்கிய அரசியல்பிரமுகர் ஒருவர் நேற்றிரவு தொலைபேசியில் பேசினார்.

மற்றொரு பங்காளிக் கட்சியாக பக்கம் 18 >>>

## பதவி விலகவேண்டும் ரணில்

### கோருகிறார் ஜி.எல். பீரிஸ்

கொழும்பு, ஜன. 25

பிரதமர்ரணில்விக்கிரமசிங்க தானாகப் பதவி விலகவேண்டும் இல்லையேல், ஜனாதிபதி அவரைப்பதவிவிலக்கவேண்டும்.

– இவ்வாறு கோரியுள்ளார்ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின் தலைவர் ஜி.எல்.பீரிஸ். பக்கம் 18 >>>

## ரயில் சேவை வழமைக்கு!

ரயில்வேபணியாளர்கள் நேற்று முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு ரயில்வே பொது முகாமையாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து கைவிடப்பட்டது.

எனினும் இந்தப் பணிப்புறக்கணிப்பின் காரணமாக, கொழும்பு கோட்டை பக்கம் 18 >>>

# ஊழலுக்கு எதிரான போர் பெப்.10 இல் ஆரம்பமாம்!

### பொலன்னறுவையில் வைத்து மைத்திரி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 25

ஊழலுக்கெதிரான போராட்டத்தை எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி[illegible] தாம் ஆரம்பித்துள்ளார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எமது நாட்டை உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலைக்கு கொண்டு வர முடியாமல் இருப்பதற்கு ஊழல் அரசி பக்கம் 18 >>>

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



# தன் காலத்தை விட இந்த அரசில் அதிக கடன் என்கின்றார் மஹிந்த!

## பதவிக் கால ஆசையால் மைத்திரியும் குழப்பத்திலாம்

கொழும்பு,ஜன.25

நான் ஆட்சியில் இருக்கும் போது நாடு பெற்ற கடன் தொகையை விடத் தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாடுகளிடம் அதிக கடன் தொகையைப் பெற்றுள்ளது - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என பலாங்கொடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது குறிப்பிட்டார்.



''ஆனால், இந்த அரசு பெற்றுக் கொண்ட கடனுக்கேற்ற வேலைத்திட்டங்கள் நடக்கவே இல்லை. ஆனால் என்னால் இப்போதும் எனது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களுக்களை பட்டியலிட்டு காட்ட முடியும். ஆட்சியிலுள்ள அரசாங்கத்திற்கு அப்படிச் செய்ய முடியுமா? எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேள்வி எழுப்பினார்.

பதவி ஆசையில் பதவிக் காலத்தை 6 ஆண்டுகளாக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சித்தார். எனினும் அவரது ஆசை நிறைவேறவில்லை. 5 ஆண்டுகள் மாத்திரமே ஜனாதிபதி பதவி வகிக்க முடியும் என தீர்ப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி குழப்பத்தில் உள்ளார்.

பதவியை தக்கவைத்துக் கொள்ள முடியாது போனதால் கோபத்தை என் மீது காட்டுகின்றார். அதனால் எந்த பிரயோசனம் இல்லை. எனக்கும் எந்தப் பாதிப்புமில்லை.- என அவர் மேலும் தெரிவித்தார். (உ)

# விபத்தில் ஒருவர் பலி!

தம்புள்ள குருநாகல் வீதியில் சமன்புர பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாதையை கடக்க முற்பட்ட ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் படுகாயமடைந்த நபர் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் சாரதி கைது செய்யப்பட்டார். குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ந்து போராட்டம்

முல்லைத்தீவு,ஜன.25

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி முதல் ஆரம்பித்த போராட்டம், தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக, 323 ஆவது நாளாகத் தொடர்ந்து வருகிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த, இராணுவத்திடம் கையளித்த, கைது செய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வைத் தருமாறு வலியுறுத்தித் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தமக்கு நீதியான தீர்வு கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடருமென அந்த மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)



# கல்விக்கதிர்

## தரம் 5 புலமைப் பரிசில் வினாத் தாள்களின் விடைகள்

**பிரபல ஆசிரியர் தயாரித்து கடந்த 19,20,21,22 இல் வெளியான வினாத்தாள் - 06 இன் பகுதி-I மற்றும் பகுதி- II இற்கான விடைகள் வருமாறு:-**

### வினாத்தாள் - I

| | | | |
|---|---|---|---|
| 01 - 3 | 11 - 2 | 21 -1 | 31 - 2 |
| 02 -3 | 12 - 2 | 22 -2 | 32 - 3 |
| 03 - 3 | 13 - 2 | 23 - 3 | 33 - 2 |
| 04 - 2 | 14 - 3 | 24 - 1 | 34 - 3 |
| 05 - 1 | 15 - 2 | 25 - 3 | 35 - 2 |
| 06 - 3 | 16 - 1 | 26 - 3 | 36 - 3 |
| 07 - 2 | 17 - 2 | 27 - 1 | 37 - 3 |
| 08 - 2 | 18 -கபடி | 28 - 3 | 38 - 3 |
| 09 - 3 | 19 - 2 | 29 - 1 | 39 - 1 |
| 10 - 3 | 20 - 1 | 30 - 2 | 40 - 2 |

### வினாத்தாள் - I I

**01**
1. அழகாகச்/ செழிப்பாக
2. பச்சைக் கம்பளம் விரித்தாற்
3. கவ்வாத்து
4. தேயிலைச் செடிகள்
5. மலை
6. காட்சியளிக்கின்றன.
7.தேயிலை

**02.**
1. வெல்லம்
2. கிலி
3.படித்தேன்
4.பெய்யும்
5.சாய்ந்தாடம்மா

**03**
1. சென்றனர்
2. பார்த்தார்
3. வரைகிறேன்

**04.**
1. பட்டகாலில் ஒத்தடம்
2. உறுமீன் வருமளவும்

**05.**
1.பன்னசாலைக்கு
2.குப்பை கூளங்களற்ற
3.விடாப்பிடியாய் நிற்றல்

**06.**
1.தயவு செய்து ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வாருங்கள்.
2.என்னிடம் இரண்டு புத்தகங்கள் உண்டு.

**07.**
1.இதோ தேநீரைக் குடியுங்கள்
2.பிறந்த நாள் வாழ்த்துக்கள்

**08.**
1.மட்ட பேனக் தென்ன
2.அத்துலட்ட என்ன

**09**
1.பேராதனைப் பூங்காவில் உலகில் காணப்படும் அழகிய தாவரங்கள் நிரைநிரையாக வளர்க்கப்பட்டுள்ளன.
2.இதனைச் சுற்றி மிகவும் நீளமான ஆறாகிய மகாவலி கங்கை மிக வேகமாகக் கரைபுரண்டோடுகிறது.
3.இது இலங்கையின் மத்திய மாகாணத்தில் காணப்படும் மிக அழகான பெரிய தாவரவியற் பூங்காவாகும்.

1. இருபத்து மூன்றாயிரத்து நானூற்று முப்பத்தாறு.
2.2039
3.xvi
4.1.112 2. 29
5.3
6.5/9
7. 1.3/9 / 9/27
 2.2/8 /8/32
8.189
9.16:40 மணித்தியாலம்
10.75kg
11.4
12.100ml
13.1.4
 2.10
14.36m
15.630

| | | |
|---|---|---|
| 1.3 | 11.2 | 21.3 |
| 2.3 | 12.2 | 22.2 |
| 3.4 | 13.4 | 23.1 |
| 4.4 | 14.3 | 24.2 |
| 5.4 | 15.3 | 25.4 |
| 6.4 | 16.2 | 26.2 |
| 7.3 | 17.3 | 27.3 |
| 8.2 | 18.2 | 28.2 |
| 9.4 | 19.4 | 29.2 |
| 10.3 | 20.2 | 30.4 |

# பருத்தியடைப்பில் படையினருக்கு காணி; சுவீகரிப்பைத் தடுத்தார் டக்ளஸ் எம்.பி.

ஊர்காவற்றுறை,ஜன.25

கடற்படையினரின் பாதுகாப்பு மற்றும் அவதானிப்பு மையம் அமைப்பதற்கெனக் கூறப்பட்டு, ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணி, நில அளவைத் திணைக்களத்தினால் இன்றைய தினம் அளவீடு செய்யப்படவிருந்த நிலையில், மேற்படி விடயம் தொடர்பில் காணி உரிமையாளர் உட்பட ஊர் பொது மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டு வர இருந்தனர்.

அதையடுத்து, காணி அமைச்சர் மற்றும் நில அளவையாளர் நாயகம் ஆகியோருடன் தொடர்பு கொண்ட டக்ளஸ் தேவானந்தா நில அளவீட்டுச் செயற்பாட்டை இடைநிறுத்தியுள்ளார்.



எமது மக்களது காணி, நிலங்களில் பல படையினரிடமிருந்து இன்னமும் விடுவிக்கப்படாதுள்ள நிலையில், எமது மக்களுக்குச் சொந்தமான மேலும் காணிகளை படையினரின் பல்வேறு தேவைகளுக்கு என சுவீகரிப்பது நியாயமற்ற செயற்பாடாகும் என்பதை சுட்டிக்காட்டியுள்ள டக்ளஸ் தேவானந்தா , மேற்படி காணி விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து, அது குறித்து ஒரு தீர்மானத்திற்கு வரும் வரையில் இக் காணி அளவீட்டை மேற்கொள்ளக் கூடாது என வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# முதிரை மரக்குற்றிகள் கிளிநொச்சியில் மீட்பு!

கிளிநொச்சி,ஜன.25

சட்டவிரோதமாக கடத்தப்பட்ட பெறுமதி வாய்ந்த முதிரை மரக்குற்றிகள், கிளிநொச்சி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் கிளிநொச்சி – உதயநகர் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றுக்கு கடத்தப்பட்ட நிலையில், கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் விசேட அணியினரால், மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியின் காடுகளில் பெறுமதியான முதிரை மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு, நகருக்குள் கடத்தப் பட்டு வருகின்றமை குறித்து தொடர்ச்சியாகப் பல தரப்பினராலும் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்ற நிலையில், இந்த மரக் குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளின் பெறுமதி நான்கு லட்சம் ரூபாவிற்கும் அதிகம் என கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரம்பொன் கர்ப்பிணித் தாய் படுகொலை விசாரணை ஒரு வருடத்தின் பின் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம்!

## ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவு

(எஸ்.நிதர்ஷன்)

ஊர்காவற்றுறை,ஜன.25

ஊர்காவற்றுறை - கரம்பொன் பகுதியில் கடந்த வருடம் ஜனவரி 24ஆம் திகதி கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்ட 7 மாத கர்ப்பிணித் தாயின் வழக்கு விசாரணைகளை சரியாக ஒருவருட நிறைவில் நேற்றையதினம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் (சி.ஐ.டியினரிடம்) வழங்க நீதிமன்று கட்டளையிட்டது.

வழக்கின் சந்தேகநபர்களான சகோதரர்கள் இருவரும் ஒரு வருடமாகத் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் நேற்று இந்தக் கட்டளையை வழங்கினார்.

சந்தேகநபர்களின் விளக்கமறியல் காலம் ஒரு வருடத்தைக் கடந்தால் அதனை மேலும் நீடிக்க மேல் நீதிமன்றிடம் சட்டமா அதிபர் விண்ணப்பிக்கவேண்டும்.

அதனை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சட்டமா அதிபரிடம் கோரி தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுப்பர்.

ஊர்காவற்றுறை பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி பட்டப்பகலில் வீடு புகுந்து ஒரு பிள்ளையின் தாயும் ஏழு மாத கர்ப்பிணியுமான ஞானசேகரன் ஹம்சிகா (வயது 27) என்ற பெண் அடித்துப் படுகொலைசெய்யபட்டார். ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தியோகத்தரான பெண்ணின் கணவர்,

பணிக்குச் சென்றிருந்த போதே இந்தக் கொலை நடந்தது.

படுகொலைச் சம்பவம் தொடர்பில் சகோதர்களான இருவர் அன்றைய தினம் மாலை மண்டைதீவு சந்தியில் உள்ள ஊர்காவற்றுறை பொலிஸ் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கின் கண் கண்ட சாட்சியாக பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்ட - வாய்பேச முடியாத - சிறுவன் அடையாள அணி வகுப்பில் சந்தேகநபர்கள் இருவரையும் அடையாளம் காட்டியிருந்தாள்.

இந்த நிலையில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் கடந்த ஒருவருடமாகச் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்று வந்தன. சந்தேகநபர்கள் இருவரும் தொடர்ச்சியாக ஒரு வருடம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொலை இடம்பெற்று நேற்றுடன் ஒருவருடம் கடந்த நிலையில் வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் இந்த வழக்கு விசாரணைகளை மாற்றுமாறு கடந்த ஒருவருடமாக சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய வழக்கு விசாரணையின் போது சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணி திருக்குமார் முன்னிலையாகியிருந்தார். இந்த வழக்கில் பொலிஸார் மந்த கதியிலேயே விசாரணைகளை மேற் கொள்கின்றனர் எனவும், இச் சம்பவம் தொடர்பான மரபணு அறிக்கையை பெற்றுக் கொள் வதைத் தாமதப்படுத்துகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் சந்தேகநபர்கள் சம்பவம் இடம்பெறும் போது சம்பவப் பிரதேசத்தில் இருந்தார்கள் என்பது தொடர்பான வீடியோ காணொலிகளை மன்றுக்கு சமர்ப்பித்த போதும் அது தொடர்பான புகைப்படங்களை இன்னமும் சமர்ப்பிக்கவில்லை எனவும் மன்றில் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன்போது பொலிஸார் தாம் இவ்வழக்கு தொடர்பான மரபணு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்கின்றனர் எனக் குறிப்பிட்டிருந்தார்கள்.

இதனையடுத்து இருதரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதிவான் இந்த வழக்கின் விசாரணையைக் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டுக் கட்டளை பிறப்பித்தமையுடன் இவ் வழக்கின் விசாரணையை எதிர்வரும் 07ஆம் திகதி வரை ஒத்தி வைக்கவும் அதுவரை இரு சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

# இலங்கை ஜனாதிபதி, பிரதமரை சிங்கப்பூருக்கு வருமாறு அழைப்பு

## இங்கு வந்துள்ள அந்நாட்டுப் பிரதமர் விடுத்தார்



சிங்கப்பூரில் நடைபெறவுள்ள உலக நகரங்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியேன் லூங் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிங்கப்பூர் பிரதமருக்கும் இடையில் நடைபெற்ற நட்புறவு பேச்சுகளின் போதே இந்த அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது.

மேலும் சிங்கப்பூரின் கூட்டு முயற்சியின் மூலம் வர்த்தக நடவடிக்கைளை மேம்படுத்த முடியும் எனவும் முதலீடு போன்றவற்றிலும் கூட்டாக செயற்படுவதன் மூலம் முக்கிய அபிவிருத்தி துறைகளில் பங்களிப்பு செய்யலாம் எனவும் சிங்கப்பூர் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள சர்வதேச தண்ணீர் வாரம், உலக நகர மாநாடு மற்றும் தூய்மையான சுற்றாடல் மாநாட்டில் முக்கிய உரையை நிகழ்த்துமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிங்கப்பூர் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளார். இதேசமயம் சிங்கப்பூருக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற் கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் சிங்கப்பூர் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# கதிர்காமத்தில் கொல்லப்பட்டவரின் குடும்பத்துக்கு புதிய வீடு, கடை

கடந்த வாரம், கதிர்காமம் பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு, புதிய வீடொன்றையும் வர்த்தக நிலையம் ஒன்றையும் அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜயலத் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் பலியான 25 வயதான நிரோஷன் என்பவர், தமது குடும்பத்தினருடன் வாழ்ந்த வீடு பாழடைந்த நிலையில் உள்ளதாலும் அவர்களுக்கான நிரந்தர வருமானத்தைப் பெறுவதற்காகவுமே, மேற்படி புதிய வீடும் வர்த்தக நிலையமும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

இன்று காலை 11.25 மணிக்குள்ள சுபநேரத்தில், கதிர்காமத்தில் அமைந்துள்ள அந்த இளைஞனின் வீடு இருக்கும் இடத்திலேயே, புதிய வீட்டையும் வர்த்தக நிலையத்தையும் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என அவர் தெரிவித்தார்.

அத்துடன், உயிரிழந்தவரின் பிள்ளை, உயர்க் கல்வியை நிறைவு செய்யும் வரையான அனைத்துக் கல்விச்செலவுகளையும் மாதாந்தம் செலுத்துவதாக, கிருளப்பனையில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்தின் உரிமையாளர் அனுஷ்க குணசிங்க தெரிவித்துள்ளார்.

# தனியார்துறை ஊழியர்களுக்கு புதிதாக சங்கம் உருவாகும்

யாழ்ப்பாண மாவட்ட தனியார் துறை ஊழியர்கள் ஒன்றிணைந்து தனியார் ஊழியர் கள் சங்கம் என்ற அமைப்பை உருவாக்க உள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

ஆரம்ப நிகழ்வு வரும் 28ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நீதிமன்றத்துக்கு அண்மையிலுள்ள ஒமேகா இன் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தனியார் துறை ஊழியர்களாகிய நாம் யாழ்ப்பாண மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுகின்றோம். எனினும் எமக்குரிய அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை.

எனவே, எமது சிறுசிறு பிரச்சினைகளைத் தீர்க்க அமைப்பு ஒன்று அவசியமாகின்றது. அதற்காகவே தனியார் ஊழியர்கள் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்படுகிறது.

அமைப்பைத் தொடர்பான கலந்துரையாடல் வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில் இடம் பெறுகிறது.

அதில் தனியார்துறை ஊழியர்கள் இரு பாலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று ஏற்பாட் டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# முன்னர் வல்வை நகர சபையில் உள்கட்சிச் சண்டையே நடந்தது

## சுயேச்சைக் குழுத் தலைவர் செல்வேந்திரா விமர்சனம்

-(எஸ்.நிதர்ஷன் )

யாழ்.வல்வெட்டித்துறை நகரசபை ஆட்சியை கைப்பற்றி கடந்த காலத்தில் ஆட்சி செய்த வர்கள் தமக்குள் சண்டைகளை போட்டார்களே தவிர, மக்களுக் கான அபிவிருத்தி வேலைகள் எதனையும் செய்யவில்லை. இந்நிலையில் மக்களுடைய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு மக்களுடைய கோரிக்கைக்கு அமைய நாங்கள் தேர்தலில் கள மிறங்குறோம்.

மக்கள் எங்களுக்கான ஆதரவை வழங்கினால் வல்வெட்டித்துறை நகரசபையின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் பெரிய அரசியல் கட்களின் பக்கம் சாயாமல் தொடர்ந்து மக்களுக் கான அபிவிருத்தியை இலக்காக கொண்டு உழைப்போம். - என வல்வெட்டித்துறையில் மீன் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவின் தலைவர் சபாரட்ணம் செல்வேந்திரா கூறி னார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன் போது மேலும் அவர் கூறுகையில்–

கடந்தகாலத்தில் வல்வெட்டித்துறை நகரசபையின் ஆட்சியை கைப்பற்றியவர்கள் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு காலத்தை வீணடித்தார்கள். அவர்கள் மக்களுக்கு தேவையான அபிவிருத்தியைச் செய்யவில்லை. இந்நிலையில் மக்களுக்கு தேவையான அபிவிருத்தியை செய்வதற்காக மக்கள் கேட்டு கொண்டதன் அடிப்படையில் நாங்கள் சுயேச்சை குழுவாக மீன் சின்னத்தில் போட்டியிடுகின்றோம். பிரசாரத்திற்காக நாங்கள் செல் லுமிடங்களில் மக்கள் எமக்கு ஆதரவு தருகிறார்கள்.

வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கூறும் கருத்துக் களும் அவருடைய செயற்பாடுகளும் மக்களையும், எங்களையும் கவர்ந்திருக்கின்றன. முதலமைச்சருக்கு எப்போதும் ஆதரவான நிலைப்பாட்டை நாங்கள் பின்பற்றுவோம்.

மேலும் வல்வெட்டித்துறை நகர சபை தேர்தலில் 6 பெரும் கட்சிகளை நாங்கள் எதிர்கொண்டிருக்கிறோம். ஜனாதிபதியின் கட்சி, பிரதமரின் கட்சி மற்றும் எதிர்க்கட்சி தலைவரின் கட்சி, உள்ளூர் நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவரின் கட்சி ஆகியன உள்ளடங்கலாக 6 கட்சிகளை எதிர்த்து நாங்கள் போட்டியிடுகின்றோம்.

எனவே இவ்வாறு எதிர்ப்பாக பலரும் போட்டியிடுகின்றபோதும் தம் எமக்கு ஆதரவாக மக்களே இருக்கின்றனர். ஆகவே மக்கள் எங்களுக்கான ஒத்துழைப்பை வழங்கும்போது சிறந்த முறையில் எந்த அரசியல் கட்சிகளின் பக்க மும் சாயாமல் தொடர்ந்து மக்களுக்காக உழைப்போம் என மக்களுக்கு உத்தரவாதம் தருகிறோம். – என்றார்.

## ஊழலுக்கு...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமது குடும்பத்தவர்களை நாட்டின் முக்கிய நிறுவனங் களின் உயர் பதவிகளில் நியமித்து, குடும்ப ஆட்சிக்கு முன்னுரிமையளித்து, அரசசொத்துக்களைத் திருடி, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த ஏகாபத்திய குடும்ப ஆட்சியை மீண்டும் இந்த நாட்டில் உருவாக்கி நாட்டை பின்நோக்கி கொண்டு செல்வதற்கு நாட்டு மக்கள் தயாராக இல்லை என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்படாத அனைத்து வாக்குகளும் ஊழல், மோசடி, களவு, வீண்விரயம் நிறைந்த ஆட்சியை மீண்டும் நாட்டில் உருவாக்குவதற்கே துணை போகும் என்றும் அவர் அங்கு சொன்னார்.


டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத் துடன் சிறந்த முறையில் ஒட்டித் தரப்படும்

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 8680 077 592 5088


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சம்பந்தனின் ஆற்றாமை!

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் தமது ஆற்றாமையை சர்வதேசத் தரப்புகளிடம் எடுத்தியம்பத் தொடங்கியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

நேற்று முன்தினம் இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவின் அரசியல், வர்த்தகம், தொலைத்தொடர்புகள் பிரிவுத் தலைவர் பொல் கொட் பிறீயிடம் இது குறித்து முறையீடு செய்த அவர், நேற்றுக் கொழும்பில் தம்மைச் சந்தித்த சிங்கப்பூர் பிரதமர் லீ ஹிசெயின் லூங்கிடம் இவ்விடயம் குறித்து புகாரளித்திருக்கின்றார்.

இலங்கையின் நீண்ட காலத் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை வெற்றிகரமான ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இலங்கையின் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்பட வேண்டியமை அவசியம் என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் சம்பந்தன்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்படும் பிழையான, தேவையற்ற அச்சங்களை நீக்கும் முகமாக, ஜனாதிபதியும் பிரதமரும் சேர்ந்து சிங்கள மக்கள் மத்தியில் தெளிவூட்டல்களைச் செய்யவேண்டும் என்பதையும் அவர் சிங்கப்பூர் பிரதமருக்கு எடுத்துரைத்திருக்கின்றார்.

யதார்த்தத்தில் ஏற்பட்டுள்ள - ஆற்றாமை - இயலாமை - சம்பந்தனை இப்படிப் பேசுத் தூண்டியிருக்கின்றது என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பை உருவாக்குதல் என்ற இலக்கோடுதான் இந்தப் புதிய நல்லாட்சி அரசை அமைக்கும் முயற்சியில் சம்பந்தன், மைத்திரி, ரணில், சந்திரிகா உட்பட அனைத்துத் தரப்புகளும் ஒன்றிணைந்தன என்பது தெரிந்த விடயம்தான்.

ஆனால், அந்த நோக்கத்தில் இந்தத் தரப்புகள் இல்லை என்பதுதான் இன்றைய நிலைமை.

குறிப்பாக இந்த முயற்சியில் பிரதான நாணயக் கயிற்றை - இலாகனை - பிடித்திருக்க வேண்டிய ஜனாதிபதி, வேறு இலக்கில் இருக்கின்றார் என்பதுதான் இடைஞ்சலான நிலைமைக்குப் பிரதான காரணம்.

ஒரு தடவை ஆட்சிக் காலத்துடன், இலங்கையின் அரசியல் செல்நெறியையே ஒரு புதிய சகாப்தத்துக்குள் கொண்டுசெல்வேன் என்று சூளுரைத்தபடி - அப்போதைய ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவுக்கு சவால் விட்டவாறு - ஜனாதிபதித் தேர்தல் களத்துக்கு வந்த மைத்திரிபால சிறிசேன வேறு; இன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தமது அதிகாரத்தைப் பிரயோகித்து நிற்கும் மைத்திரிபால சிறிசேன வேறு.

அப்படித் தமது போக்கு நிலைமையை மைத்திரிபால சிறிசேன மாற்றிக் கொண்டமைதான் சம்பந்தனின் இன்றைய ஆற்றாமைக்குப் பிரதான காரணமாகும்.

அன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியைத் துறந்து, அப்போதைய எதிரணியின் பொது வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவின் பொறுப்பும், கடப்பாடும், இலக்கும் வித்தியாசமானவை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை ஈட்டியதும் சுதந்திரக் கட்சித் தலைமையை அவர் சுவீகரித்துக் கொண்டார். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு அந்தக் கட்சியின் தலைமை உதவும் என்று பார்த்தால் அதனுடன் சேர்ந்து வேறு சில வினைகளும் - நெருக்கடிகளும் - கூட்டுச்சேர்ந்து அவருக்கு வந்துவிட்டன.

ஜனாதிபதித் தேர்தல் தோல்வியுடன் வீட்டுக்கு நடையைக் கட்டுவார் என எதிர்பார்க்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ, சாம்பல் மேட்டிலிருந்து பீனிக்ஸ் பறவை மீள உயிர்த்தெழுகின்றமை போல அரசியலில் விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றார்.

அவரது மீள் எழுச்சியால், சுதந்திரக் கட்சித் தலைமையும் பறிபோய் விடுமோ என்ற ஏக்கத்தில் சிக்கி நிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தம்முடைய அடுத்த பதவிக் காலம் குறித்துச் சிந்திக்க வேண்டியவராகிவிட்டார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கத்தை தனது முன்னுரிமையான கடமையாகக் கொண்டு அதிகாரத்துக்கு வந்த மைத்திரிபால சிறிசேனவின் முன்னால் இப்போது முன்னுரிமைக்குரிய கட்டாயங்களாக இருப்பவை வேறு.

அரசியலில் விஸ்வரூபம் எடுத்து வரும் மஹிந்த தரப்பை எதிர்கொள்வது, சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பைக் காப்பாற்றிக்கொள்வது, எதிர்காலத்தில் அரசியல் பழிவாங்கல்களில் சிக்கி, நெருக்கடிகளை எதிர்கொள்ளாமல் இருப்பதற்குத் தோதுவாக அதிகாரத்தில் நீடிப்பது, அதிகாரத்தில் நீடிப்பதற்கான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையைத் தன்கையில் வைத்தவாறு தொடருவது என்று அவருக்குள்ள தெரிவுகளும், தேவைகளும், இலக்குகளும், நோக்கங்களும் இப்போது வேறானவை.

சம்பந்தன் எதிர்பார்க்கின்றமை போல, பிரதமருடனும் ஏனைய தரப்புகளுடனும் சேர்ந்து புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஜனாதிபதி மைத்திரியும் முழு மூச்சுடனும், முழு ஈடுபாட்டுடனும் பங்களிக்க வேண்டும் என்பது யதார்த்தத்தில் நடைபெறும் சாத்தியம் மிகவும் குறைவு.

இது சம்பந்தனுக்கும் நன்கு தெரியும். சர்வதேசத் தரப்புகளிடம் முறையிட அவர் ஆரம்பித்திருக்கின்றமை அதன் விளைவுதான்.

யாழ். பொது நூலகத்தில்

# சிறுவர் நாடகக் கொண்டாட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் சிறுவர் நாடகக் கொண்டாட்டம் நாளைஆரம்பமாகிறது.

செயல் திறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'பஞ்ச வர்ண நரியார்' சிறுவர் நாடகம் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு மேடையேறுகிறது.

உலகப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணப் பொதுசன நூலகமும் ஈழத்தின் நாடக உலகில் தனித்துவமான அடையாளத்தைப் பதிவு செய்திருக்கின்ற செயல் திறன் அரங்க இயக்கமும் இணைந்து நடத்தும் சிறுவர் நாடகக் கொண்டாட்டம்-2018 'பஞ்சவர்ணநரியார' சிறுவர் நாடகமேடையேற்றத்துடன் ஆரம் பமாகிறது.

ஒவ்வாரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமைகளில் சிறுவர் நாடகங்களை மேடையேற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சிறுவர்களின் குதூகலிப்புக்கான அரியதொரு களமாக இது அமையும்.

பரபரப்பான வாழ்க்கைச் சுமை மற்றும் கல்விச்சுமையால் அல்லலுறும் சிறுவர்ககளின் மன விடுவிப்புக்கான களமாகவும் இது அமையும்.

சிறுவர்களின் உளசமூகவிருத்திக்கான மகிழ்வூட்டலையும் அறிவூட்டலையும் அடிப்படையாகக் கொண்ட சிறந்த சிறுவர் நாடகங்கள் மேடையேறுகின்றன. சிறுவர்களையும் பெற்றோர்களையும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்

# மைத்திரியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி இரு தலைவர்களுடனும் தனித் தனியாக சம்பந்தன் நடத்திய சந்திப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் விடுக்கப்பட்ட செய்திக் குறிப்புகளிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சிங்கப்பூர் பிரதமருடனான சந்திப்புத் தொடர்பான செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இரா.சம்பந்தன் இலங்கை வந்துள்ள சிங்கப்பூர் பிரதமர் லீ ஹிசேயின் லூங்கியை நேற்று கொழும்பில் சந்தித்தார்.

புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பிலான தற்போதைய நிலைமைகுறித்துசிங்கப்பூர் பிரதமருக்கு இரா.சம்பந்தன் தெளிவுபடுத்தினார். இந்த நடைமுறைகளை வெற்றிகரமான ஒரு முடிவுக்குக் கொண்டு வரு வதற்கு இலங்கையின் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்படவேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டிய சம்பந்தன், புதிய அரசமைப்புத் தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பப்படும் பிழையான, தேவையற்ற அச்சங்களை நீக்குமுகமாக ஜனாதிபதியும் பிரதமரும் சிங்கள மக்கள் மத்தியில் புதிய அரசமைப்புத் தொடர்பில் தெளிவூட்டல்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

தற்போது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானவையல்ல என்பதையும் இரா.சம்பந்தன் சிங்கப்பூர் பிரதமருக்கு எடுத்துக் கூறினார்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஒருமித்த, பிரிக்க முடியாத, பிரிவுபடாத நாட்டிற்குள் தீர்வொன்றை விரும்புகிறார் கள். ஆகவே, புதிய அரசமைப்பு தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற ஒன்றாக அமைய வேண்டுமென வும் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

போலியானஒருதீர்வை நாம் எப்போதும் ஏற்கப் போவதில்லை எனவும் மக்கள் தமது நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் தங்களதுஅதிகாரங்களைப் பாவிக்கக்கூடிய ஓர் உண்மையான அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டையே நாம் வேண்டி நிற்கிறோம் என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் இருக்க முடியாதெனவும், இந்த வருடத்திற்குள் புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்நாடு கடந்த காலங்களில் துரதிஷ்டவசமாக பிழையான பாதையில் பயணித்துள்ளது. இந்நிலைமைகளை சரிசெய்வதற்கு இதுவொரு நல்ல தருணம் எனவும் சம்பந்தன் எடுத்துக் கூறினார்.

சம்பந்தன் இலங்கையில் விசேடமாக வடக்குக் கிழக்கில் சிங்கப்பூர் முதலீட்டாளர்கள், முதலீடுகள் மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்தவேண்டுமெனசிங்கப்பூர் பிரதமரிடம் வேண்டிக்கொண்டார்.

வடக்கு, கிழக்கில் உள்ள இளைஞர்கள் அர்ப்பணிப்புள்ள, கடின உழைப்பாளிகள். ஆனால் துரதிஷ்டவசமாக யுத்தத்தின் நிமித்தம் அவர்களுக்கான வேலை வாய்ப் புக்களும் திறன் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

சிங்கப்பூர் அரசும் மக்களும் எமதுஇளைஞர்களின்திறன்களையும் அறிவையும் விருத்திசெய்வ தும் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்வதுமான முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வரவேண்டும் எனவும் அவர் வேண்டிக் கொண்டார். வடக்கு, கிழக்கில் காணப்படும் பெருமளவிலான வாய்ப்புக் களைச் சுட்டிக்காட்டிய சம்பந்தன் விசேடமாக, இயற்கைத் துறைமுகம் ஒன்றையும் மேலும் பல வளங்களையும் கொண்ட திரு கோணமலையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் சிங்கப்பூர் கருத்திற் கொள்ள வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார். இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இம் முதலீடுகள் ஒரு பலமாக அமையும் அவர் எனவும் சுட்டிக்காட்டினார்.

வடக்கு, கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்ளும் படியான சம்பந்தனின் கோரிக்கை குறித்துத் தான் சிங்கப்பூர் முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடுவார் என உறுதி வழங்கிய சிங் கப்பூர் பிரதமர், தனதுஅடுத்தவிஜயத்தின்போது நிச்சயம் திருகோணமலைக்கு விஜயம் செய்வார் எனவும் தெரிவித்தார்.

மேலும், சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு இலங்கைத் தமிழ் மக்கள் ஆற்றிய பங்களிப்புக்கு நன்றி தெரிவித்த சிங்கப்பூர் பிரதமர் எதிர்காலத்தில் சம்பந்தன் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றியடையவேண்டுமெனத் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார். - என்று உள்ளது.

### இந்தோனேசிய தலைவருடன் சந்திப்பு

இந்தோனேசிய ஜனாதிபதியுடனான சந்திப்புக் குறித்த செய்திக் குறிப்பின் விவரம் வருமாறு:-

சம்பந்தனுக்கும் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோக்கோ விடோடோவிற்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில்இடம்பெற்றது.

இச்சந்திப்பில் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் கருத்து தெரிவித்த சம்பந்தன் நீண்ட காலயுத்தத்தின் காரணமாக பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில்இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளமையையும், இந்நிலையைசீர்செய்வதற்கு சர்வதேசத்தின் உதவி தேவை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கிலுள்ள மக்களின் பிரச்சினைகளை இந்தோனேசிய ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்த சம்பந்தன், வேலை வாய்ப்பின்மையையும் அதனால் இளைஞர்கள் எதிர் நோக்கும் விளைவுகளையும் முறையான பொருளாதார முதலீடுகளின் மூலம் தீர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தோனேசிய ா முதலீடுகள் செய்வதை உறுதிப்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கை மக்களின் – விசேடமாக யுத்தத்தினால் அதிகம் பாதிப்பிற்குள்ளான – வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகள் தொடர்பில் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்திய சம்பந்தன், ஒருமித்த பிரிக்கப் படாத, பிரிவுபடாத நாட்டிற்குள் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு தாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் எனவும், நீண்டகால யுத்தத்திற்கு பின்னர் தமது இந்த முயற்சிகளுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் எனவும், இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடாது தேசிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை எட்டும் வகையில் இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும்தெரிவித்தார்.

இலங்கையின் ஜனாதிபதியும் பிரதமரும் புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதின் முக்கியத்துவத்தையும் தேவையையும் நாட்டு மக்கள் அனைவருக்கும் எடுத்துக் கூறி அவர்களின் ஒத்துழைப்பை பெறவேண்டும் என்பதையும்வலியுறுத்தினார்.

தேசிய பிரச்சினையின் காரணமாக ஐம்பது வீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர் எனவும், இவர்களில்பெரும்பாலானவர்கள் கல்விமான்கள் எனவும் தெரிவித்த சம்பந்தன் ஒரு புதிய அரசமைப்பின் ஊடாக தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணுவதன் மூலம் இத்தகைய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதை உறுதிசெய்ய முடியும் எனவும்கூறினார்.-என்று உள்ளது.

## நாளை

26.01.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : கார்த்திகை
பி.இ.2.30 வரை
திதி : நவமி மு.ப. 9.23 வரை
சுபநேரம் : 6.36 – 8.06 வரை
இராகுகாலம்: 11.06 –12.36 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் தனி நாடு கேட்பதிலும் நியாயம் உண்டு என்கிறார் சந்திரிகா

கொழும்பு,ஜன.25

தமிழ் மக்கள் உரிமைகள் கோருகின்றமையை நியாயப் படுத்தியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இலங்கையில் நீண்ட கால மாகத் தமிழ் மக்கள் முகம் கொடுத்துள்ள மாற்றங்கள் காரணமாக இவ்வாறான கோரிக்கை வலுப்பெற்றுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.



பெரும்பான்மை இன சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தித் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். எங்களுக்குச் செய்யவில்லை என்றால் எங்களுக்குத் தனி நாடு வழங்குங்கள் என தமிழ் மக்கள் தமிழீழம் கோருவது நியாயமான ஒன்றாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சிறிய நாடு. இங்கு பெருமளவு மக்கள் இல்லை. பல தசாப்தங்களாக பிரிந்து வாழும் மக்கள் பகுதியினர் ஒருவருக்கு ஒருவர் அறிமுகப்படுத்தி கொள்ளாமையே போர் நிலை ஏற்பட்டது.

நான்கு மதங்களை சேர்ந்த மகைகள் நாட்டில் வாழ்ந்த போதிலும், ஒருவருக்கு ஒருவர் ஒருபோதும் பேசிக் கொள்வதில்லை. நாட்டில் பெரும் மோதல் ஏற்படுவதற்கு அது போதுமானதாகும்.

ஒருவருடைய மொழியை ஒவ்வொருவராலும் பேச முடியாமையே நாட்டில் கொடூர யுத்தம் ஏற்படுவதற்கான பிரதான காரணம்.

சமூகங்கள் சகஜமாக இருந்திருந்தால் பிரபாகரன் என்ற ஒருவரை உருவாக்காமல் இருந்திருக்கலாம்.

தமிழ், முஸ்லிம் பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்ட போதிலும் மந்தமான நிலையில் காணப்படுகிறது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## வெள்ளவத்தையில் ரயில் விபத்தில் பெண் உயிரிழப்பு



கொழும்பு,ஜன.25

வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் காலையில் இடம் பெற்றரயில் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். வவுனியா தாண்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த கமலவதனா(கமலி) என்ற 35 வயதுடைய பெண்ணே உயிரிழந்தவராவார்.

வெள்ளவத்தை ரயில் நிலையத்தில் தனது ஆறு வயது மகனுடன் ரயிலிலிருந்து மற்றுமொரு ரயிலுக்கு மாறும் போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் தாய் உயிரிழந்துள்ளார். மகன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார் எனத் தெரிவிக் கப்பட்டது.


## தெரணியகல மக்களை அச்சுறுத்தும் சிறுத்தை

தெரணியகல,ஜன.25

தெரணியகல பிரதேச மக்களை சிறுத்தை புலியொன்று அச்சுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெரணியகல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மஹா தென்ன, நூரியாவத்த, மராவத்த, பொல்கஸ்வத்த ஆகிய பகுதிகளில் இந்தப் புலி நடமாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் உள்ள நாய்கள் மற்றும் பன்றிகளை இந்த புலி, கொன்று உணவாக உட் கொண்டு வருவதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



இதனால், பொல்கஸ்வத்த, பஸ்னாகல ஆகிய இடங்களில் கிராம மக்கள் வீடுகளை அடைத்துக் கொண்டு உள்ளே அச்சம் காரணமாக இருக் கின்றார்கள்.

இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் இந்தப் புலி கிராமங்களுக்குள் புகுந்து நாய்களை வேட்டையாடிச் சென்றுள்ளது.

இதன் காரணமாக பெருந் தோட்டங்களில் பணியாற்றி வரும் அப்பாவித் தொழிலாளிகள் பெரும் பீதியடைந்துள் ளமையுடன், அவர்களது வழமையான வாழ்வும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வன விலங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கு அறிவிக் கப்பட்டுள்ளது என தெரணிய கலபொலிஸ்நிலையப்பொறுப் பதிகாரி ஏ.கே. தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் பகலில் வந்து தேடிய போது புலி அகப்பட வில்லை எனவும், இரவிலேயே புலி நடமாடுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பிரதேசத்தை அச்சுறுத்தி வருவது புலி என பிரதேச மக்கள் கூறி வருகின்ற நிலையில் இது சிறுத்தையாக இருக்கலாம் என வனவிலங்குப் பாதுகாப் புத் திணைக்களஅதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## காங்கேசன்துறை கடலில் 186 கிலோ கஞ்சா மீட்பு

### சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.25

காங்கேசன்துறை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் 186 கிலோ நிறையுடைய கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன என யாழ் பிராந்திய கடற்படையின் உதவிப்பணிப்பாளர் ஆர். ஐயந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.



19 லட்சம் ரூபா பெறுமதியுடைய இந்த கேரள கஞ்சா பொதிகள் காங்கேசன்துறை கடற் பரப்பில் மிதந்து வந்த நிலையில் மீட்கப்பட்டன என அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் சந்தேகத்திற்குரிய இடத்தில் நின்றபோது கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் கடற் படையினர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையினை கடற்படையினர் மேற்கொள்கின்றனர். சந்தேகநபரை, கைப்பற்றப் பட்ட கஞ்சாப் பொதிகளுடன் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று கடற் படையினர் கையளிக்கவிருந் தனர். (உ)

## 20 வருடங்கள் கோமாவில் இருந்தவர்கள் இந்த 2 வருடங்கள் தான் சுயநினைவில்!

### சிறுபான்மைக் கட்சிகளை நையாண்டி செய்கிறார் ஐ.தே.கவின் எம்.பி.

கொழும்பு,ஜன.25

இருபது வருடங்களாக கோமாவில் இருந்தவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னரே விழித்துள்ளனர்

– ஐக்கிய தேசியக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் இவ் வாறு தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கிண்ணியா மீனவர் சங்க பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

நல்லாட்சி அரசாங்கத்தின் சலுகைகளை பெற்றுக்கொண்டு சேவை செய்வதாகக் கூறி உங்கள் முன்வாக்கு கேட்டு வரும் சிறுபான்மைக் கட்சிகளின் உறுப்பினர்கள் கடந்த இருபது வருடங்களாக கோமாவிலா இருந்தனர்? நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலப்பகுதியிலும் அவர்கள் அமைச்சர்களாகவே



இருந்தனர்.

மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் அவர்களிடமே காணப்பட்டன. இருந்தும் அவர்களால் நாம் ஆட்சியில் இல்லாத இருபது வருடங்களாக ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஏன் என்றால் சேவை செய்யக் கூட அவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி தான் தேவைப்படுகிறது.

கோமாவில் இருந்து விழித்த அவர்கள் இத்தேர்தல் வந்ததன் பின்னரே சுயநினைவுக்குத் திரும்பி உங்கள் வீடுகளுக்கு வந்து வாக்குக் கேட்பதோடு தோணி, வலை, தையல் இயந்திரம் போன்ற வாழ்வாதார உதவிகளைத் தேர்தல் விதிமுறைகளை மீறி வழங்கி வருகின்றனர்.

சகல அதிகாரங்கள் இருந்தும் இருபது வருடங்களாக மக்களுக்குச் சேவை செய்ய முடியாதவர்கள் ஏன் இன்று மட்டும் இவ்வாறான வாழ்வாதார உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதை மக்கள் உணர வேண்டும்.

இந்த உள்ளூராட்சி, மாகாண சபை அதிகாரங்களை ஐக்கிய தேசியக் கட்சிக்கு தந்து பாருங்கள். உங்களுக்குத் தோணி, வலை அல்ல கடலையே உங்களுக்காக தருகின்றோம். அதன்பின் உங்களின் வாழ்வாதாரங்களை நீங்களே பார்த்துக் கொள்ளும். நிலைக்கு உங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவோம்.– என்றார். (உ)

## மஹா கும்பாபிஷேகம்

சுன்னாகம்,ஜன.25

உடுவில் ஞான வைரவர் ஆலய சம்புரோஷண மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணி முதல் 8.02 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்குரிய கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை காலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாவதுடன் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் 11 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (இ)

★ ★ ★

நவாலி,ஜன.25

நவாலி அட்டகிரி கந்தசுவாமி ஆலய பாலஸ்தான கும்பாபிஷேகம் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.30 மணி முதல் 7.33 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. இப்பாலஸ்தாபன கும்பாபிஷேகத்துக்குரிய கிரியைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதம் தூக்கிப் போராடியவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்

## தேர்தல் பரப்புரையில் யோகேஸ் எம்.பி.

மட்டக்களப்பு,ஜன.25

தமிழர்கள் சகல உரிமையுடனும் வாழ வேண்டும் என்பதற்காக ஆயுதம் தூக்கிப் போராடியவர்களின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத் தொடர்ச்சியான முயற்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் இடம் பெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்தவை வருமாறு -

கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பிள்ளையான் இருந்த போது பிரதேசசபை மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையை அவர்கள்தான் ஆட்சிசெய்தார்கள். மஹிந்த ராஜபக்ஷவின் கைக்கூலியாக இருந்து அவர்களின் சின்னத்திலேயே போட்டியிட்டனர். 2008ஆம் ஆண்டு பிள்ளையான் முதலமைச்சராக ஆக்கப்பட்ட நிலையில், 2009ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட நிலையில் அபிவிருத்தி யடையாத பகுதியாக வடக்கு, கிழக்கு பகுதி காணப்பட்டதன் காரணமாக அப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்காகக் கோடிக்கணக்கான ரூபா பணம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சர்வதேச நாடுகளால் வழங்கப்பட்டது.

இலவசமாக வழங்கப்பட்ட பணம் எல்லாம் தென் பகுதி அபிவிருத்திக்கு வழங்கப்பட்டது. கடனாக வழங்கப்பட்ட நிதிகளில் பெரும்பாலானவை வடக்கு, கிழக்கிற்கு வழங்கப்பட்டன. பிள்ளையானுக்கு வழங்கப்பட்ட நிதியைச் சரியாகக் கையாண்டிருந்தால் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்றிருக்கும்.

கரடினாறில் இருந்து விடு தலைப் புலிகளின் வைப்பகத் தில் இருந்த பெருமளவான பணமும், நகைகளும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியைச் சேர்ந்தவர்களால் கொள்ளையிடப்பட்டு சுவிஸ் நாட்டில் பிள்ளையானால் பெரிய நகைமாளிகை திறக்கப்பட்டுள்ளது.

பலரின் பெயரில் சுவிஸ் வங்கிகளில் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. அவர் முதலமைச்சராக இருந்தபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வீடுகளில் கொள்ளைகளும் நடத்தப்பட்டன. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுசெய்யவும் பயந்த நிலையிலேயே இருந்து வந்தனர். இவ்வாறான சூழ்நிலையிலேயே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆட்சியை நடத்தியது.



நாங்கள் இந்த நாட்டின் தேசிய இனம், பூர்வீக குடிகள், இந்த நாட்டில் சகல உரிமைகளையும் அனுபவிக்க வேண்டியவர்கள். இரண்டாம் தரப் பிரஜைகளாகத் தமிழர்களை வைத்திருப்பதற்கு அனுமதிக்க முடியாது.

அதன்காரணமாகவே எமது உறவுகள் ஆயுதம் ஏந்திபோராடிப் பல தியாகங்களைச் செய்துள்ளன. எதற்காக அவர்கள் ஆயுதம் தூக்கிப்போராடினார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்என்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. நாங்கள்

அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

# மணல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் கைது

கரடியனாறுப் பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட எட்டு உழவு இயந்திரங்கள் மணல் ஏற்றப்பட்ட இழுவைப் பெட்டிகளுடன் கைப்பற்றப்பட்டதுடன் எட்டு சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சாரதிகளிடம் மணல் அகழ்வதற்கான அனுமதிப் பத்திரங்கள் காணப்பட்டபோதிலும் சட்டத்திற்கு முரணாக ஆற்றின் உட்பகுதியில் மணல் அகழ்ந்த குற்றச்சாட்டின்பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்ட விரோதமான முறையில் மணல் அகழப்படுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் குழுவினர் முந்தன் குமாரவெளி ஆற்றிற்குள் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றினர் அத்துடன் சாரதிகளையும் கைது செய்து கரடியனாறு பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

## முஸ்லிம்களை இழிவுபடுத்தியமை

# மு.கா. தேசிய அமைப்பாளர் ஷபீக் நேற்றுப் பதவியிலிருந்து ராஜினாமா

கிழக்கு மாகாண முஸ்லிம்களை இழிவுபடுத்தி முகநூலில் கருத்து வெளியிட்டு சர்ச்சைக்குள்ளாகியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையின் பிரதி தலைவருமான ஷபீக் ரஜாப்தீன் அப்பதவிகளில் இருந்து நேற்று புதன்கிழமை ராஜினாமா செய்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் குறித்த விடயம் தொடர்பில் விளக்கம் கோரியதைத் தொடர்ந்தே ஷபீக் ரஜாப்தீன் இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார் என அந்தக் கட்சியின் செயலாளர் நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்

சம்மாந்துறையை சேர்ந்த முகநூல் நண்பர் ஒருவருடன் சமகால அரசியல் தொடர்பாக விவாதிக்கும்போது கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அரசியல் செயற்பாடுகளை விமர்சித்தும் இழிவுபடுத்தியும் ஷபீக் ரஜாப்தீன் கருத்துக்களை வெளி யிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து நபர் முகநூல் வாயிலாக அம்பலப்படுத்தியதை தொடர்ந்து அவர் மீது பலத்த கண்டனமும் விமர்சனமும் எழுந்திருந்தது.

ஷபீக் ரஜாப்தீனின் இந்த நடவடிக்கையால் கட்சி மீதும் தலைமைத்துவம் மீதும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வந்ததுடன், இவர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. கட்சி முக்கியஸ்தர்களும் இதற்கு அழுத்தம் கொடுத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்தே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்தும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையின் பிரதித் தலைவர் பதவியில் இருந்தும் தான் விலகிக்கொள்கிறேன் என அறிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir



# மைத்திரியின் கீர்த்திக்குச் சேறு பூசும் வேலை தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைப்பாம்!

## மஹிந்த தரப்பின் திட்டம் தமக்குத் தெரியும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.25

தனக்கு எதிராக சேறு பூசும் பணி நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது என ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமையிலான ஒரு தரப்பு இவ்வாறு தனக்கு எதிராகச் சேறு பூசு வதில் தீவிரம் காட்டி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக எவ்வித குற்றச்சாட் டுக்களையும் முன்வைக்க முடியாத காரணத்தினால், தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பில் சேறு பூசும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மஹிந்த உள்ளிட்ட வர்கள் தமக்கு எதிராக சேறு பூசுவது குறித்து பேச்சு நடத்தியுள்ளனர் என வும், அது பற்றிய முழு விவரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் இணையத் தளங்கள் உள்ளிட்ட பல்வேறு வழி களில் தமக்கு எதிராகச் சேறு பூசப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(உ)







பிரபல பொப் இசைப் பாடகர் ஏ.இ.மனோகரனின் இறுதிக் கிரியைகள் நேற்று சென்னையில் இடம்பெற்றன.

இலங்கை - இந்திய அமைப்பின் இணைப்பாளர் மணவை அசோகன், சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் அதி காரிகளான ஜெயசங்கர், பரீஸ் ஆகியோர் ஏ.இ.மனோகரனின் மகன் டன்ஸ்டன் பாபுவுடன் உரையாடும் படம் இது. (உ)

# புத்தளத்தில் குடும்பப் பெண் மர்மமான முறையில் கொலை

கொழும்பு, ஜன.25



புத்தளம், தில்லையடி, ரத்மல்யாய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மர்மமான முறையில் கொலை செய் யப்பட்டிருந்த பெண்ணின் சட லத்தை நேற்றுமுன்தினம் மாலை தாம் கண்டெடுத்தனர் என புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

56 வயதுடைய எம். புவனேஸ்வரி என்ற குடும்பப் பெண்ணே இவ் வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இப்பெண் வீட்டில் தனிமையில் இருந்தபோது கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு கொலை செய்யப்பட்டி ருக்கலாம் எனப் பொலிஸார் சந்தே கிக்கின்றனர்.

கொலை செய்யப்பட்ட பெண் புத்தளத்தில் அமைந்துள்ள நீர்ப் பாசன அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற பின்னர் புத்தளம் தனி யார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தவர் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

இப்பெண்ணுடன் அவரது சகோ தரியும் அவ்வீட்டில் வசித்து வந்துள் ளார். கொலை இடம்பெற்ற தினம் சகோதரி வவுனியாவில் வசிக்கும் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந் துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும், இவ்வீட்டிற்கு வந்தவர் கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் கொண்டுவந்ததாகக் கருதப்படும் சைக்கிள்கள் அவ்வீட்டுக்கு அரு கிலுள்ள காட்டினுள் கைவிடப்பட்டி ருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

புத்தளம்பொலிஸ்நிலையப்பொறுப் பதிகாரி அநுர குணவர்தன உள் ளிட்ட பொலிஸ் குழுவினர் இந்த வீட்டுக்குச் சென்று சம்பவம் தொடர் பான விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

*ஊவா முதலமைச்சரின் அடாவடியான செயல்:*

# பாதிக்கப்பட்ட பதுளைத் தமிழ் அதிபர் தேம்பித் தேம்பி அழுதவாறு சாட்சியம்

கொழும்பு,ஜன.25

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தி யாலத்தின் அதிபர் ஆர்.பவானியை அச்சுறுத்தி முழந்தாளிட வைத்த சம்பவம் தொடர்பில், கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி துறை சார் மேற் பார்வைக்குழு முன்னிலை யில், நேற்றுமுன்தினம் விசாரணை கள் நடைபெற்றன. நாடாளு மன் றத்தில் பிற்பகல் 1:30க்கு ஆரம் பமான அந்த விசாரணைகள், சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற் றன.

அந்தக் குழு அறைக்குள் ஊடகவி யலாளர்கள் அனுமதிக்கப்படாத போதும், அதிபர், தேம்பித் தேம்பிய ழுது சாட்சியளித்தமையைக் காணக் கூடியதாக இருந்தது. அவர் சாட்சிய மளிப்பது, கண்ணாடிகளுக்குவெளியே தெட்டத்தெளிவாகத் தெரிந்தது. அழுகுரலும் கேட்டது.

ஒருகணத்தில், உணர்ச்சிவசப் பட்டு, தேம்பியழுந்து கண்ணீர் மல் கிய அதிபர், முதலமைச்சருக்குத் தெளிவுபடுத்திப் பார்த்தேன், அவர் கேட்கவில்லை. முடியாத குறைக்குத் தான் காலில் விழுந்தேன். அந்த நேரம், செத்துவிடலாம் போலிருந் தது- என்றார்

இதனிடையே, ஊடகவியலாளர்கள் வெளியே நின்றுகொண்டிருந்த போது, அமைச்சர் திகாம்பரம் அந்த அறையிலிருந்து வெளியேறினார். அவருடைய கண்களில் கண்ணீர் குளம் கட்டியிருந்தது.

''நுவரெலியா மாவட்டத்தில் இவ் வாறான ஒரு சம்பவம் இடம்பெறுவ தற்கு இடமளிக்கமாட்டேன். எங் களுடைய அதிபர், ஆசிரியர்களி டத்தில் ஒற்றுமையில்லை. சில அரசியல்வாதிகள் தங்களுடைய பெயருக்காக அரசியல் செய்கின் றனர். அதைத்தான் தமிழ்ப் பத்திரி கைகள்சிலதூக்கிப்பிடித்துக்கொண்டு அறிக்கையிடுகின்றன.

மலையக மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கும் ஒன்றுமே செய்யாதவர்கள், எங்களுடன் மல்லு கட்டிக் கொண்டிருக்கின்றனர். நுவரெலியாவுக்கு ஜனாதிபதி வந்த



தும் நன்றாகச் சொல்வேன்'' எனக் கூறினார், அதிபர் கண்ணீர் மல் கியதைப் பார்த்ததும், எனக்கும் கண் கலங்கிவிட்டது என்று கூறிக் கண் களைத் துடைத்துக் கொண்டு அவ்வி டத்திலிருந்து அகன்று சென்று விட் டார்.

விசாரணையின் பின்னர், ஊடக வியலாளர் சந்திப்பை நடத்திய வடி வேல் சுரேஷ் எம்.பி, மலையகத்தைச் சேர்ந்த சகல எம்.பிக்களும் ஜனாதி பதியையும் பிரதமரையும் சந்தித்து, இந்த விவகாரம் தொடர்பில், எமது நிலைப்பாடுகள் குறித்து அறிவிப்ப தற்கும் நடவடிக்கையெடுத்துள் ளோம்.

பதுளையில் முதலமைச்சரால், பாடசாலை அதிபர் ஒருவரை முழங் காலிட வைக்கப்பட்ட சம்பவத்தை, ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடி யாது. இதனால் இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி துறைசார் மேற்பார்வைக் குழு முன் னிலையில் விசாரணைகள் நடத் தப்பட்டுள்ளன. முதலமைச்சர், தனது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அழைத்து இவ்வாறு நடந்து கொண் டுள்ளார்.

இதேவேளை, இந்த விவகாரம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு எனது எம்.பி. பதவிதான் பிரச்சினை யென்றால், அதனையும் தூக்கியெ றிந்து விட்டு, நானும் ஆசிரியர்களு டன் இணைந்து போராடுவேன். இதன்படி, மலையகத்தைச் சேர்ந்த சகல எம்.பிக்களும் பதவிகளைத் துறந்து வெளியேறுவோம் .என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக ரீதியிலான கணிதப் போட்டி

சிதம்பரா கணிதப் போட்டி 2018 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு பாடசாலை மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிஎதிர்வரும் 31 ஆகும்.

இந்தப் பரீட்சை மார்ச் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இலங்கை, இங்கிலாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடைபெறும். இது தொடர்பாக மேலதிக விவரங்களை Cwn11- plus.co.uk என்ற இணையத்தளத்தில் பார்வையிட்டு விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் Cwn11 plus committee.No.06, theeruvillane, valvettithurai எனும் தபால் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சிதம்பரா கணிதப் போட்டிக் குழு கேட்டுக்கொண்டுள்ளது. (இ)

## தினசரி ராசி பலன்
(25.01.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 12ஆம் நாள் வியாழக்கிழமை அஷ்டமித்திதி. பகல் 3.14 மணி வரை பின்னர் நவமி. நட்சத்திரம். அசுவினி காலை 8.21 மணி வரை பின்னர் பரணி. அமிர்தயோகம் முழுவதும். காலை 8.21 வரை அதன் மேல் மரணம் பகல் 3.14 வரை பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** *-பகல் 1.50 மணி முதல் 3.17மணி வரை*

**சுபநேரம்** *- மாலை 8.06 மணி முதல் 9.36 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *தை மாத வளர்பிறை அஷ்டமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பரணி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** ஆக்கபூர்வமான நாள். பணம் தேவைக்கேற்ப வந்து சேரும். வியாபாரிகளுக்கு வருமானம் கணிசமாகக் கிடைக் கும். மாணவர்களுக்கு மேற்படிப்புக்கான முயற்சித் திட்டம் நிறைவேறும்.

**ரிஷபம்** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியாக வெளியூர்களுக்கு நிறைய அலைய வேண்டி வரும். வரவேண்டிய கடனை வசூலிக்க படாதபாடு படுவார்கள். சிலர் அரசாங்க வேலை தேடி அலைந்து திரிவார்கள்.

**மிதுனம்** அனுகூலமான நாள். பணம் கையில் தாராளமாகப் புரளும். நீண்ட நாள் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு உண்டாகும். வியாபாரத்தில் அபிவிருத்தி ஆதாயம் இருக்கும். உத்தியோகத்தர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சரளமாக இருக்கும். சிலருக்கு திடீர் செலவுகள் உண்டாகும். தந்தையின் உடல் பாதிப்படைந்து மருத்துவச் செலவு ஏற்படும். செய்தொழிலில் போட்டி இருக்கும்.

**சிம்மம்** உயர்வான நாள். பணம் பல வழிகளில் வந்து சேரும். பிள்ளைகளால் முன்னேற்றமும், மனம் மகிழும் சம்பவங்களும் நிகழும். சகோதர உறவு வலுவடையும். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவார்கள்.

**கன்னி** கவலையான நாள். வருமானம் குறைவடையும். சிலருக்கு குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். உத்தியோகத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு மேலதிகாரிகளின் கெடுபிடி கவலையைத் தரும்.

**துலாம்** விருத்தியான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். சிலருக்கு பெரிய மனிதர் சந்திப்பால் நன்மை விளையும். நீண்ட காலப் பகை தீரும். சகோதர உறவு பலப்படும். குடும்பத்தில் ஒற்றுமை உணர்வு அதிகரிக்கும்.

**விருச்சிகம்** இன்பமான நாள். தொழில் முன்னேற்றமும், வியாபாரத்தில் அபிவிருத்தியும், ஆதாயமும் உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் அதிகமாகும். பணவரவு தாராளமாக இருக்கும்.

**தனுசு** இனிமையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு ஏற்படும். உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு, விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**மகரம்** யோசனையான நாள் வர வேண்டிய பணம் வரத் தாமதமாகும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யச் சிரமப்படுவார்கள். வியாபாரத்தில் பலத்த போட்டிகளைச் சமாளிக்க நேரும்.

**கும்பம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். அலைச்சல் தடங்கலுடன் காரியம் நிறைவேறும். செலவுகள் வழக்கத்தை விட அதிகம் ஏற்படும்.

**மீனம்** கீர்த்தியான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். சிலருக்கு வீடு, வாகனம் வாங்கும் அனுகூலமான சூழ்நிலை அமையும்.

**சந்திராட்டமநாள்: அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# சிறுமியைக் கடத்தி வன்புணர்ந்த நபருக்குக் கடூழியச் சிறைத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணம் - கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பதின்ம வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்தகுற்றவாளிக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

குற்றவாளி மற்றொருவழக்கில் கொலைக் குற்றத்துக்காக 10 ஆண்டுகள் கடூழியச்சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றமையால் இந்த வழக்கின் தண்டனையை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்து மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

அந்த வழக்கிலும் அவருக்கான தண்டனையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ் செழியன்தான் வழங்கினார். இந்தத் தண்டனை 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிறுமி ஒருவர், அவரது பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து கடத்திச்சென்று கிளிநொச்சி அக்கராயன் குளம் பகுதியில் வைத்து வன்புணர்வுக் குட் படுத்தப் பட் டார். 2012ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சிறுமி வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் இணுவிலைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பிரேமன் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிரான ஆரம்ப விசாரணைகள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டது. சந்தேக நபரும் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சிறுமியைக்கடத்திச்சென்றமை மற்றும் வன்புணர்ந்தமை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்து சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக் களத்தால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு இவ்வாற முற்பகுதியில் விசாரணைக்கு வந்தது. சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் எதிரி மன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் தன் மீதான 4 குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக் கொண்டார்.

முதலாவது குற் றத்துக்கு 5 ஆண்டுகள் ஒத்தி வைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையுடன் 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படுகிறது. அதனைச் செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத் தண்டனையை எதிரி அனுபவிக்கவேண்டும்.

இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது குற்றங்களுக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட தலா 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. அத்துடன் தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படுகிறது. அதனை செலுத்தத் தவறின் 3 மாத சிறைத் தண் டனையை எதிரி அனுபவிக்க வேண்டும்.

குற்றவாளிக்கான தண்டனையை ஏககாலத்தில் மன்று விதிக்கிறது. அதன்படி, 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. தண்டமாக 12 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 4 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 30 ஆயிரம் ரூபா இழப்பீட்டை குற்றவாளி செலுத்தவேண்டும்.

அதனை வழங்காவிடின் 3 மாதங்கள் சிறைத் தண்டனையைஅனுபவிக்கவேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பளித்தார்.

# ஆலய உற்சவம்

மாவிட்டபுரம் தெற்கு கம்மன்சீமா ஸ்ரீஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் அலங்கார உற்சவம் 12 தினங்கள் நடைபெறவுள்ளதுடன் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகமும் தொடர்ந்து மாலை திருவிழா 7 மணிக்கு ஆரம்பமாகி வசந்த மண்டபத்தில் பூசை மற்றும் திருவூஞ்சல் வைபவம் இடம்பெற்று சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும்.

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, குமுழமுனை, மாஞ்சோலை வைத்தியசாலை, முல்லைத் தீவு விமானப்படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59 ஆவது படைப்பிரிவு (14ESR- 01 மற்றும் 14ESR- 02), SFHQ வற்றாப்பளை, குமுழமுனை பல நோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை, 12 VIR இராணுவமுகாம், 16 ESR இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில் -**

கோவில்குளம், ஆச்சிபுரம், சமணன்குளம், மகாமயிலங் குளம், மருதநகர், எல்லப்பமருதங்குளம், பெரியகூமரசங்குளம், ஆசிக்குளம், சிதம் பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# மெய்வன்மைப் போட்டி

கோப்பாய் கிறிதவக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நவரட்ணராஜா விளையாட்டு மைத்தானத்தில் அதிபர் ச.வேலழகன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா பிரதம விருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் க.சந்திரலிங்கம், இலங்கை இராணுவ கூடைப்பந்தாட்ட வீரர் து.ரட்சகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (இ

★ ★ ★

அச்சுவேலி, ஜன.25

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பழைய மாணவரும் யாழ்ப்பாண மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபருமான சு.முரளிதரனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலாளர் யு.ஜெலீபனும் கௌரவ விருந்தினராக கல்லூரியின் ஓய்வுநிலை பகுதித் தலைவர் நா.சண்முகரட்ணம், பழைய மாணவர் இ.சிவதயாளன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ)

★ ★ ★

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி சி.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.திருக்குமரன் ஆகியோர் கலந்துகொள்வர். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வி கண்டவர் - Taylor Dibbert
வழிமூலம் - Huffington post
மொழியாக்கம் - நித்தியபாரதி



# வடக்கில் தொடர்ந்து தங்குவதற்கான தந்திர ஏற்பாடே இது!

## மக்களின் உடைமைகளை சூறையாடிய ராணுவம் வீடுகள் கட்டித் தருகிறது

ஒற்றையாட்சி முறைமை நீடிக்கும் வரை எங்களால் இலங்கை இராணுவத்தை வெளியேற்ற இயலாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். Huffington post என்ற அனைத்துலக ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

முதலமைச்சரின் நேர்காணல் வருமாறு:

**கேள்வி:** மைத்திரிபால சிறிசேன மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். இந்நிலையில் வடமாகாணத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைச்சவால்கள்எவை?

**பதில்:** முன்னர் நிலவிய சூழல் தற்போதில்லை என்பதில்எவ்விதசந்தேகமுமில்லை. பரந்துபட்டளவில் நோக்கில் ஜனநாயகம் மீண்டும் நடைமுறைக்குவந்துள்ளது. ஆனாலும் எமது எதிர்பார்ப்புக்கள் இன்னமும் பூர்த்திசெய்யப்படவில்லை. இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுற்று ஒன்பது ஆண்டுகள் கடந்த போதிலும் கூட தற்போதும் 60,000 ஏக்கருக்கும் மேற்பட்ட தனியார் மற்றும் அரச காணிகள் இலங்கை இராணுவத் தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. நில உரிமையாளர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல் வதற்காகக் காத்திருக்கும் அதேவேளையில் இவர்களின் நிலங்களில் இலங்கை இராணுவத்தினர் பயிர்ச் செய்கைகளிலும் அறுவடைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

அரசுக்குச் சொந்தமான பெரும்பாலான நிலங்கள் காடுகளாகும். இங்குள்ள பெறுமதி மிக்க மரங்கள் வெட்டப்பட்டு பிற தேவைகளுக்காக எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த மரங்கள் யாரால் வெட்டப்படுகின்றன என்பது எங்களுக்குத் தெரியாது. இவ்வாறு காடுகள் அழிக்கப்படுவதால் யானைகள் தமது பாரம்பரிய வாழிடங்களை விட்டு வெளியேறி பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளில் நுழைவதுடன் அங்குள்ள பயிர்களையும் ஏனைய உடைமைகளையும் சேதமாக்குகின்றன.

வன்னிப் பிரதேசத்தில் வாழும் இளம் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் இராணுவத்தினரின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகியுள்ளனர். இராணுவத்தினருக்கு எதிராக இவர்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை பொலிஸார் ஏற்க மறுக்கின்றனர்.

### எமது மீனவர்களுக்கு பல்வேறு நெருக்கடிகள்

பல நூற்றாண்டுகளாக பாரம்பரிய மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த எமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி இடங்களில் தென்பகுதி மீனவர்கள் மீன்பிடிக்கும் நிலை காணப்படுகிறது. இதற்கு இராணுவத்தினரும் தமது பாதுகாப்பை வழங்குவதால் எமது மீனவர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றனர். வடமாகாணத்தில் சட்டரீதியற்ற முறையில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் தென் பகுதி மீனவர்கள் தங்குவதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாறு பகுதியில் நிரந்தர தங்ககங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான எமது சுற்றுலாப் பயண மையங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவர்கள் பல்வேறு விடுதிகளை நடத்தி வருகின்றனர். இந்த இடங்களிலும் மற்றும் இவற்றைச் சூழவுள்ள இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இதன் மூலம் தற்போது சிங்களத்தில் பத்துன எனப் பெயரிடப்பட்டுள்ள தமிழர்களின் வாழ்விடமான மாதகல் போன்ற இடங்கள் சிங்களவர்களுக்குச் சொந்தமான பூர்வீக நிலங்கள் என பொய்யான பரப்புரை மேற்கொள்ளப்படுகிறது.

அனைத்துப் பெயர்ப் பலகைகள் மற்றும் அறிவித்தல் பலகைகள் போன்றன சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் வடக்கு கிழக்கானது சிங்களவர்களுக்குச் சொந்தமான நிலப்பிரதேசம் என இலங்கை இராணுவத்தினர் உரிமைகோர முயல்கின்றனர். சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களை ஒருபோதும் பெரிய எண்ணிக்கையில் ஆக்கிரமிக்கவில்லை. தற்போது வடக்கு கிழக்கில் உள்ள பௌத்த எச்சங்கள் தமிழ் பௌத்தர்களால் கைவிடப்பட்டவையாகும்.

### எமது உள் விவகாரங்களில் இராணுவம் தலையீடு

எமது மக்களின் வர்த்தக நடவடிக்கைகள் இலங்கை இராணுவத்தினரின் உறவுகளால் நடத்தப்படுகின்றன. வவுனியா தொடக்கம் சாவகச்சேரி வரையிலான ஏ-09 நெடுஞ்சாலையில் பெருமளவான சிங்களக் கடைகளைக் காண முடியும்.

பிள்ளைகளுக்கான முன்பள்ளிகளை நடத்துவதற்காக இளம் தமிழ்ப் பெண்களை இலங்கைப் படையினர் அதிக சம்பளத்தில் நியமித்துள்ளனர். இவ்வாறு இணைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இலங்கை இராணுவத்தினரால் இராணுவப் பயிற்சிகள் மற்றும் உடற்பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை இராணுவத்தால் பயிற்சி வழங்கப்பட்ட இத்தமிழ்ப் பெண்கள் முன்பள்ளிகளில் கல்வி கற்பிப்பதற்குப் பொருத்தமானவர்களா என மக்கள் வினவுகின்றனர். முன்பள்ளிக் கல்வி என்பது எமது கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள ஓர் அலகாகும்.

ஐக்கியநாடுகள்சபைமற்றும்ஏனைய நிறுவனங்களிடம் இலங்கை அரசால் வாக்களித்ததற்கு அமைவாக இன்னமும் இந்த நாட்டிலிருந்து பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பல சந்தேகநபர்கள் எவ்வித வழக்குகளுமின்றி தொடர்ந்தும் சிறைகளில் வாடுகின்றனர். இவர்கள் தொடர்பில் நீதி வழங்குமாறு நாங்கள் ஜனாதிபதியிடமும் ஏனைய அதிகாரிகளிடமும் பலமுறை கோரிக்கை விடுத்த போதிலும் எமது கோரிக்கைகள் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று வீணாகிவிட்டன.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பலருக்கு என்ன நடந்தது என்பதை அவர்களின் அன்புக்குரியவர்கள் இன்று வரை அறிய முடியாத நிலையிலுள்ளனர். அனைத்துலகச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இராணுவத்தினர் விளக்க வேண்டும்.

**கேள்வி:** எதிர்காலத்திலும் வட மாகாணம் இராணுவமயப்படுத்தப்பட்டிருக்குமா? இந்தவிடயத்தில் எவ்வித முன்னேற்றமும் எட்டப்படவில்லை என் பது தொடர்பாக நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா?

### முண்டியடித்து உதவி

**பதில்:** எப்போதும் வடமாகாணத்தில் இராணுவத்தை நிலைநிறுத்தி வைத்திருப்பதே நோக்கமாகும். இதற்காக இராணுவத்தினர் பொதுமக்களுக்கு உதவுவதில் ஈடுபடுகின்றனர். அதாவது, வீடுகள் மற்றும் மலசலகூடங்களைக் கட்டிக்கொடுத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் மக்களின் மனதைக் கவருவதற்கான நடவடிக்கைகளை இலங்கை இராணுவம் முன்னெடுத்து வருகிறது. இதன்மூலம் தொடர்ந்தும் வடமாகாணத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர்.

மக்களைக் கொன்றொழித்த, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய, தமிழ் மக்களின் உடைமைகளைச் சூறையாடிய அதே இராணுவத்தினர் தற்போது புதிய முகம் ஒன்றுடன் வந்துள்ளனர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தை உருவாக்கியமைக்காக தற்போதைய இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்கவை நான் வாழ்த்த வேண்டும். எங்களால் எமது மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான போதியளவு நிதி வளத்தைக் கொண்டிராமையால் இவர்களுக்கு இலங்கை இராணுவத்தால் வழங்கப்படும் வீட்டுத் திட்டங்கள் மற்றும் ஏனைய திட்டங்களை நாம் மறுக்கமாட்டோம் என்பதை இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க நன்கறிந்துள்ளார்.

## ஒற்றையாட்சி நீடிக்கும் வரை படையினரை வெளியேற்ற இயலாது

ஆகவே, ஒற்றையாட்சி முறைமை நீடிக்கும் வரை எங்களால் இலங்கை இராணுவத்தை வெளியேற்ற இயலாது. எமக்கான சமஷ்டி நிர்வாக அலகைக் கொண்ட அரசமைப்பை உருவாக்குவதைத் தவிர்ப்பதற்கான பல்வேறு வழிகளை இலங்கை அரசாங்கம் கண்டுபிடித்து வருகிறது. எமக்கான பாதுகாப்பு மற்றும் நலன்களை எமக்கு வழங்கக்கூடிய சமஷ்டி நிர்வாக முறைமை கொண்டுவரப்படாவிட்டால், இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்தும் எமது பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டேயிருப்பார்கள்.

**கேள்வி:** நம்பகமான மற்றும் முழுமையான இடைக்கால நீதித் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசாங்கம் அக்கறையற்று இருப்பது போல் தெரிகிறது. இது தொடர்பில் தங்களின் கருத்து என்ன?

**பதில்:** இந்தநாட்டில்வாழும்அனைத்து சிறுபான்மை இனத்தவர்களையும் கனவான்கள் போன்று மிகவும் கண்ணும் கருத்துமாகப் பார்ப்பதாக இலங்கை சுதந்திரமடையும் போது பிரித்தானியாவிடம் தெரிவித்திருந்தது. ஆனால், இக்கருத்திற்கு முரணாக இலங்கை செயற்படுவதன் மூலம் பிரித்தானியாவையும் சிலோனிலுள்ள சிறுபான்மையினரையும் முட்டாளாக்கியுள்ளதை இலங்கை அரசாங்கம் கவனத்திற் கொள்ளவேண்டும். பிரித்தானியா இந்தநாட்டைவிட்டுவெளியேறிய பின்னர் இலங்கை ஆட்சியாளர்கள் அனைத்து அதிகாரங்களையும் தம்வசப் படுத்தியதுடன் தமது உண்மையான முகம் என்ன என்பதையும் காண்பிக்கத் தொடங்கினர்.

### கதை பேசுவதில் வல்லவர்கள்

இடைக்கால நீதிப் பொறிமுறையானது அதிகாரப் பரவலாக்கல் மற்றும் குற்றவாளிகளுக்கான தண்டனை போன்றவற்றை உள்ளடக்குகிறது. ஆனால், இலங்கை அரசாங்கம் தன்வசமுள்ள அதிகாரங்களை ஏனைய இனத்தவர்களுடன் குறிப்பாக தமிழ்ச் சமூகத்துடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. அத்துடன் சித்திரவதை, பாலியல் வன்புணர்வு, கொள்ளையடித்தல், கொடூரத் தாக்குதல்கள் போன்ற போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதற்கு இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை. பதிலாக இவர்களைக் கதாநாயகர்கள் என அரசாங்கம் புகழ்கின்றது.

இவ்வாறானதோர் அரசாங்கம் இடைக்கால நீதிப்பொறிமுறையை அமுலாக்குவது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தும் என தாங்கள் கருதுகிறீர்களா? அவர்கள் கதை பேசுவதில் மட்டும் வல்லவர்கள். இவர்கள் அனைத்துலக சமூகத்திடம் வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் முட்டாளாக்குகின்றனர்.

**கேள்வி:** சிறிசேன அரசாங்கத்துடனான ஏனைய நாடுகளின் உறவு குறிப்பாக அமெரிக்காவின் உறவுநிலை மிகவும் நெருக்கமடைந்துள்ளது. இவ்வாறான உறவுநிலையானது இலங்கையில் சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான உந்துவிசையாக அமைகிறதா?

**பதில்:** சிறிசேன அரசாங்கத்தை அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பாராட்டியிருந்தனர். ஆனால், இதே நிலை தற்போதும் காணப்படுகிறதா என் பது சந்தேகமே. இதற்கான வேற்றுத் தெரிவை அனைத்துலக நாடுகள் கொண்டிருக்காமல் இருக்கலாம். ஆனால், சிறிசேன அரசாங்கத்தின் முன்னேற்றமற்ற செயற்பாடுகள் இந்த நாடுகளை தற்போது அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளன என்பது நிச்சயமானதாகும். இந்த நாடுகளின் பாராட்டுக்கள் மற்றும் ஆர்வமான அணுகுமுறை போன்றன இலங்கையில் சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான உந்துதலை வழங்கவில்லை. சிங்களத் தலைவர்கள், சிறுபான்மைச் சமூகத்தை நசுக்குகின்ற பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த நிலையானது சிறுபான்மையினருக்கு குறிப்பாக, தமிழ் மக்களுக்குச் சார்பான இதயசுத்தியுடனான சீர்திருத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனுமதிக்காது. இடைக்கால நீதிப் பொறிமுறையை உள்ளடக்கிய சீர்திருத்தமானது அனைத்துலக சமூகத்திடமிருந்து எழும் அழுத்தங்கள் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

**கேள்வி:** நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக தாங்கள் ஏதாவது எதிர்வு கூறல்களைக் கொண்டுள்ளீர்களா?

**பதில்:** எதுவுமில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா



# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

408

**ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்த ஜனாதிபதியின் டிசெம்பர் 6 அறிவிப்பை, 128 நாடுகள் கண்டனம் செய்த நிலையில், ஐ.நா. பொது அவையில் ட்ரம்ப் நிர்வாகம் ஒரு அவமானகரமான தோல்வியைத் தழுவியது. அச்சபையில் 128 இற்கு 9 வாக்குகள், 35 நாடுகள் வாக்கெடுப்பை நிராகரித்ததுடன் சேர்ந்து, அமெரிக்கா முற்றிலும் தனிமைப்பட்டிருப்பதைப் பிரதிபலிக்கிறது என்பதோடு, இது மத்திய கிழக்கில் ஒரு வன்முறை மோதலுக்கான சாத்தியக்கூறை அதிகரித்துள்ளது.**



இந்த வாக்கெடுப்புக்கு முன்னதாக ட்ரம்ப் மற்றும் பிற அதிகாரிகளின் மிரட்டும் மற்றும் பீதியூட்டும் ஓர் ஆக்ரோஷமான பிரசாரம் இருந்தது. அமெரிக்காவுக்கு எதிராக வாக்களிக்கும் எந்தவொரு நாட்டுக்கும் வளர்ச்சி நிதியுதவிகள் வெட்டுப்படுமென அண்மையில் ட்ரம்ப் அச்சுறுத்தினார். ''நூறு மில்லியன் கணக்கான டொலர்களை, பில்லியன் கணக்கிலான டொலர்களையும்கூட நம்மிடம்பெற்றுக்கொண்டு, பின் அவர்கள் நமக்கு எதிராகவே வாக்களிக்கிறார்கள், என்று ட்ரம்ப் தெரிவித்தார். நல்லது, அத்தகைய வாக்குகளை நாம் கவனத்தில் கொள்வோம். நமக்கு எதிராக அவர்கள் வாக்களிக்கட்டும். நாம் நிறைய சேமிக்கலாம். நமக்கு கவலையில்லை'' என்றார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹேலெ பொது அவையில் வழங்கிய அவரது உரையிலும் கூட தாக்குதல்களைத் தொடர்ந்தார். ஓர் இறையாண்மை தேசமாக எங்களின் உரிமையை பயன்படுத்தியதற்காக பொது அவையில் தனிமைப்படுத்தி தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள இந்நாளை, அமெரிக்கா நினைவில் கொள்ளும், என்று அவர் அறிவித்தார்.

மேலும், பல நாடுகள் அவை பெரும்பாலும் செய்வதைப் போல, தங்களின் நலன்களுக்காக எங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தவும் மற்றும் கூடுதலாக நிதியுதவி வழங்குமாறு எங்களைக் கோரி வருகையிலும் இதை நாங்கள் நினைவில் கொள்வோம் என்றார். வாக்குகள் என்னவாக இருந்தாலும், வொஷிங்டன் அதன் கொள்கையில் உறுதியுடன் நிற்குமென தொடர்ந்து அப்பெண்மணி அவையில் ஆணவத்தோடு தெரிவித்தார்.



டோகொ, மார்ஷல் தீவுகள், மைக்ரோனேஷியா, பாலோ, நெளரூ, குவாண்டமாலா மற்றும்ஹோண்டுராஸ் ஆகியவை மட்டுமே ஜெருசலேம் அங்கீகாரத்தை ஆதரித்து அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தரப்பில் இருந்தன. முப்பத்தைந்து நாடுகள் வாக்கெடுப்பை நிராகரித்தன மற்றும் 21 நாடுகள் வாக்கெடுப்பில்கலந்துகொள்ளவில்லை. இது ட்ரம்ப் மற்றும் ஹேலே இன் அச்சுறுத்தல்கள் சிறிது பாதிப்புகளைக் கொண்டிருந்ததற்கு அடையாளமாக இருந்தது.

தொடர்ச்சியான பல ஐ.நா. தீர்மானங்களில் இஸ்ரேலுக்கான அதன் ஆதரவில் அமெரிக்கா பெரும்பாலும் ஒரு சிறிய சிறுபான்மையையே பெற்றுள்ளது என்றாலும், அமெரிக்காவை இந்தளவுக்கு வெளிப்படையாக எதிர்க்கப் பல நாடுகள் தயாராக இருப்பதானது ஏகாதிபத்தியங்களுக்கு இடையே அதிகரித்து வரும் விரோதங்களுக்கும், அமெரிக்க முதலாளித்துவத்தின் நீடித்த வீழ்ச்சிக்கும் ஒரு வெளிப்பாடாகும்.



இஸ்ரேல் சம்பந்தமான தீர்மானங்களைப் புறக்கணித்து விடும் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி போன்ற பாரம்பரிய அமெரிக்க கூட்டாளிகள், ட்ரம்பின் அறிவிப்பைக் கண்டித்து வாக்களித்தன. அமெரிக்காவின் நெருக்கமான கூட்டாளியாக ஏற்கப்படுவதும் மற்றும் ஐ.நா. சபையில் இஸ்ரேலின் பாதுகாப்பிற்காக தொடர்ந்து வாக்களித்துள்ளதுமான கனடாவே கூட, வாக்களிப்பைப் புறக்கணித்தது.

**ட்ரம்பின் உளறலான அச்சுறுத்தல்கள் வெகு சிறிதே தாக்கத்தைக் கொண்டிருந்தன என்பதோடு வொஷிங்டனின் அந்தஸ்து முடிவாக மதிக்கப்படவில்லை என்ற உண்மையானதுஇ மத்திய கிழக்கில் அமெரிக்கா ஆக்ரோஷமான விளாசலில் இறங்கி, ஒரு பேரழிவுகரமான பிராந்திய மோதலைத் தூண்டிவிடலாம் என்ற அபாயத்தை மட்டுமே அதிகரிக்கிறது.**



ட்ரம்ப் நிர்வாகத்தின் இந்த அடாவடித்தனமான மற்றும் மிரட்டும் நடவடிக்கைகள், இவ்வார தொடக்கத்தில் ட்ரம்பின் தேசிய பாதுகாப்பு மூலோபாயத்தில் எடுத்துரைக்கப்பட்டதைப் போல, வல்லரசு மோதல்களில் போய் முடிவதுடன் பிணைந்துள்ளன.

ஒரு கால் நூற்றாண்டுக்கும் அதிகமாகத்தோற்றப்பாட்டளவில்தடையில்லா போரில் ஈடுபட்டு, இந்நிகழ்முறையில் மில்லியன் கணக்கானவர்களின் உயிர்களைப் பறித்துள்ள அமெரிக்க ஆளும் வர்க்கம், 20 ஆம் நூற்றாண்டின் இரண்டு உலகப் போர்களுக்குப் பின்னர் பார்த்திராத அளவிலான இராணுவ மோதல்களை இப்போது பரிசீலித்து வருகிறது.

ஜெருசலேம் மீதான அவர் போக்கை எதிர்த்த நாடுகளுக்கு நிதியுதவிகளை வெட்டுவதற்கான தனது அச்சுறுத்தலை ட்ரம்ப் மேற்கொண்டாலும் கூட, அதுவும் மேற்கொண்டு மத்திய கிழக்கில் வல்லரசு பதற்றங்களை மட்டுமே தீவிரப்படுத்தும். எகிப்து, ஜோர்டான், ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் பாகிஸ்தான் ஆகிய அனைத்து நாடுகளும் இத்தீர்மானத்தை ஆதரித்ததன் மூலமாக வொஷிங்டனை மீறின.

ஜேர்மனி தலைமையிலான ஐரோப்பிய சக்திகள், அப்பிராந்தியத்தில் அமெரிக்காவை விலையாகக் கொடுத்து அவற்றின் செல்வாக்கை விரிவாக்க ஜெருசலேம் தீர்மானத்தை ஒரு சந்தர்ப்பமாக விளங்கப்படுத்திக் கொண்டன. மேலும் அமெரிக்க ஆதரவு கீழிறங்கியதால் பின்னுக்கு விடப்பட்ட வெற்றிடத்தை விரைவாக அவை நிரப்பக்கூடும். எரிசக்தி வளம் மிகுந்த அப்பிராந்தியத்தில் சவாலுக்கிடமற்ற மேலாதிக்கத்தைத் திரட்டுவதற்கான வொஷிங்டனின் ஆக்ரோஷமான முனைவுக்கு, பிரதான தடைகளாக விளங்கும் ரஷ்யாவும் சீனாவும் கூட இச்சந்தர்ப்பத்தைக் கைப்பற்றலாம்.

பாதுகாப்பு அவையில் அத்தீர்மானத்திற்கு எதிராக ஹேலே இன் ஒரேயொரு வாக்கு, அங்கே அத்தீர்மானம் நிறைவேறாத வகையில் வீட்டோ அதிகாரத்தால் தடுக்கப்பட்ட மூன்று நாள்களுக்குப் பின்னர், நிபந்தனை ஏதுமற்ற பொது அவையில் இந்த வாக்குகள் வந்தன.

(கேள்வி தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



ஐந்தாவது காரைநகர் கம்பன் விழா 21.01.1994

**த.முகுந்தன்**

கஜரூபனோடு வந்து இணைந்தவன் இவன். யாழ். மத்திய கல்லூரியில் படித்தவன். அதிகம் சுயகௌரவம் பார்ப்பவன். கழகத்தில் பற்றிருந்து பணிகள் செய்தாலும், ஆரம்பத்தில் சற்றுத் தூரவே நின்றவன். 1995இல் நாம் யாழை விட்டு இடம்பெயர, எம்மை விமர்சித்தவர்களில் இவனும் ஒருவன். அக் காலத்தில் இவனது தாய் கடும் நோயுற்று, இவனால் கொழும்பு அழைத்து வரப்பட்டார். எம்மை விமர்சித்தான் எனும் கோபத்தில், நான் அவனுக்கு அப்போது அதிக அனுசரணை செய்யாது விட்டேன். இன்றும் அது பற்றி என் மனம் நாணும். ஆனாலும், இச் சம்பவங்கள் எமக்கிடையிலான அன்பைச் சிதைக்கவில்லை. கால ஓட்டத்தில் அது மீண்டும் பூத்துக் குலுங்குகிறது. இப்போது உதவி அரச அதிபராய் ஆகியிருக்கிறான். ஆரம்பத்தில் கடும் வறுமை கடந்து நிமிர்ந்தவன். இன்று உயர்வு வந்ததும் அவ் வறுமை வடு அழிக்க, நிமிர்ந்து முயல்கிறான். ஆளுமையாளனாகத் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டுமெனும், வேகம் இவனது நிறை. இழப்புக்களைச் சந்திக்காது அதை எய்த நினைப்பது இவனது குறை. எனது ஆளுமைகள் பலவற்றைத் தன்னுள் பதிவு செய்து கொள்வான். தன் சுயம் விட்டு இப்பொழுதுதான், கழகத்துடனான இவன் தொடர்பு நெருங்கியிருக்கிறது.

**இராசமலர்**

எங்கள் கழகத்தின் மேல் அன்பு கொண்ட மூதாட்டி இவர். காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்டவர். அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த, 'சங்கரப்பிள்ளை அன்ட் பிறதர்ஸ்' நிறுவனக் குடும்பத்தைச் சார்ந்தவர். கழக நிகழ்ச்சிகள் அனைத்திலும் கலந்துகொள்வார். எங்களை அடிக்கடி கையுறைகளோடு வந்து காண்பார். அவர் வீட்டில் நல்ல உணவுகள் செய்தால், அவ்வுணவு எங்கள் கழகத்திற்கும் கட்டாயம் வரும். சிலகாலம் பெரியதொரு முச்சக்கர வண்டியைத் தமக்காக உருவாக்கி, யாழ்ப்பாணம் முழுவதும் வேடிக்கை பார்க்கப்பார்க்க ஓடித்திரிந்தவர். ஆளுமை மிக்க பெண்மணி. 1995 இடப்பெயர்வின் பின் சிலகாலம், யாழ். கம்பன் கோட்டத்தை தனியொருவராக நின்று காத்தவர். பின்னாளில், கொழும்பில் கம்பன் பணிகளுக்கு, துணை நின்று பணியாற்றி வரும் பாலேந்திரனை, கழகம் நோக்கி நெறிப்படுத்தியவர். பாலேந்திரனின் மூத்த சகோதரி இவர். முத்தமிழின் மேலும் பற்றுக் கொண்டவர். தன்னை முதன்மைப்படுத்துதல், ஆணவம், புகழ் விருப்பம், அளவுக் கதிகமான பிடிவாதம், மற்றவர்களில் பிழை காணுதல், முதுமைக்கேற்பக் கனியாத் தன்மை என்பவை இவரது குறைகள். சமூகப் பணிகள் மீதான நாட்டம் இவரது நிறை. தனது உறவு அனைத்தையும் ஆட்டி வைக்கும் இவர், அன்பினால் அஞ்சுவது எனக்கு மட்டுமே. கழகக் குடும்பத்தின் மேல் அக்கறை கொண்ட மூதாட்டி.

**ச.ஆ.பாலேந்திரன்**

நான் முன்னர் சொல்லியிருக்கிற



# உன்னைச் சரணடைந்தேன்

இராசமலர் அக்காவின் தம்பி இவர். யாழ்ப்பாணத்தில் இருந்த போது, இவருக்கும் எமக்கும் அதிக தொடர்பு இருக்கவில்லை. சிவராமலிங்கம் மாஸ்டரின் மாணவரான இவர், எம்மோடும் கழகத்தோடும் இணைய வேண்டும் என்று விரும்பினாராம். அவ்விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, அவர் பல விதத்திலும் முயன்று இருக்கிறார். அப்போது மண்ணெண்ணெய்க்கு யாழில் பெரிய தட்டுப்பாடு. கரண்டியால் அளந்து மண்ணெண்ணெய் விட்டு விளக்குக் கொளுத்துகிற காலமது. எங்கள் நட்பைப் பெற வேண்டும் என்பதற்காக கிளிநொச்சியிலிருந்து, ஒரு கலன் நிறைய மண்ணெண்ணெய் கொண்டு, எங்கள் கோட்டத்திற்கு ஒரு நாள் வருகை தந்திருக்கிறார். வாசலில் நின்ற ரத்தினகுமார் 'என்ன அலுவல்?' என்று கேட்க, ''இல்லை, உங்களுக்கு மண்ணெண்ணெய் கொண்டு வந்தனான்'' என்று பதில் சொல்லி யிருக்கிறார். எவரோடும் அதிகம் கதைக்கும் இயல்பில்லாத ரத்தின குமார், எண்ணெயை வாங்கிக் கொண்டு, அவரை வாசலில் வைத்தே திருப்பி அனுப்பி விட்டாராம். நாம் கொழும்பு வந்த பிறகு, எங்களோடு இணைந்த பாலேந்திரன் சொல்லித்தான், இந்தக் கதையெல்லாம் எனக்குத் தெரிய வந்தது. பிற்காலத்தில் கொழும்பில், பாலேந்திரன் கம்பன் கழகத்தில் இணைந்து நிறையப் பாடுபட்டான். ஜெயராஜின் வலது கை இவர் தான் என்று மற்றவர்கள் சொல்லுமளவு, பின்நாளில் கழகத்தில் முக்கிய இடம்பெற்றார். இவர் பற்றிய மற்றைய விடயங்களை அடுத்த பாகத்தில் சொல்கிறேன்.

**ச.முகுந்தன்**

இவன் போட்டிகள் மூலம் கழகத்தினுள் நுழைந்த கவிஞன். வயதிற்கு மிஞ்சிய கவிதை ஆற்றல் அவனுடையது. கம்பன் மேடைகளை, தன் கவிதையாற்றலால் மிளிரச் செய்தவன். கராட்டி முதலிய பயிற்சிகள் மூலம் உடலைப் பலம் செய்தவன். ஆனால், இவனது உளத்தின் பலம் சற்றுத் தளர்வானதே. கம்பன் கழக முத்திரை தனது வருங்காலத்தைப் பாதிக்கும் எனக் கருதி, பல்கலைக் கழகத்தில் இருக்கும் வரை, எங்கள் மேடைகளில் ஏற மறுத்தான். தேவைகளை நிறைவேற்ற, உறவுகளை மறைத்த இவன் செயல் கண்டு சலிப்புற்றேன். இன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில், ஆற்றல் உள்ள விரிவுரையாளனாய் இயங்கி வருகிறான். எட்ட நினைத்த உயரத்தைத் தொட்ட பின்பு, இப்போது மீண்டும் எங்கள் கவியரங்கங்களில் கலந்து கொள்கிறான். அவனால் நமக்கும் பெருமையே.

**சோமாஸ்**

நெல்லியடி தயாபரனோடு வந்து, எம்மோடு இணைந்தவன் இவன். பருத்தித்துறையைச் சேர்ந்தவன். உண்மை உழைப்பாளி. பொய் அறியாதவன். கழகத்தின் உண்மை விசுவாசி. சிலகாலம் வைமன் ரோட்டில் எங்களோடு வீட்டுப் பிள்ளையாய் வாழ்ந்தான். கடைசி வரை கழகத்திற்கு உண்மையாய் உழைத்தான். இடப் பெயர்வு அவனை சற்றுத் தூரக் கொண்டு சென்றது. பின் அண்மையில் கனடா சென்று அங்கிருந்தும் அன்பைத் தொடர்கிறான்.

**சோதிலிங்கம்**

கழகத்தில் அன்பு கொண்டவர். நீர்வேலியைச் சேர்ந்தவர். பரம இரசிகர். நல்லவற்றைக் குதூகலித்து இரசிப்பவர். இரசிப்பதை மிகைப்படுத்தி வெளிப்படுத்துவார். கழக இளைஞர்கள் பலரும் இவரது வாக்கு வசீகரத்திற்கு ஆட்பட்டவர்கள். தாம் செல்லும் இடமெல்லாம், கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளராய்ச் செயற்படுவார். எம்மை எதிர்ப்பவர்கள் அவரது பகைவர் ஆவார்கள். அந்தளவிற்கு எம்மை நேசித்தவர். உரையாடலில் தன்னை மறப்பது இவரது குறை. கழகத்தின் உண்மை விசுவாசி. இன்று இவரது மகன் சுதன், கழகக் குழுவில் ஒருவனாய், புதிய நிர்வாகத்தில், பொருளாளர் பொறுப்பேற்று நெருங்கிச் செயற்படுகிறான்.

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப்

## 77

**தணிகாசலம்**

ஊரெழு நண்பன் இவன். தமிழில் பைத்தியமாய் இருந்தவன். அதனால், கழகத்தை உயிராய் நேசித்தவன். மீசைதாண்டிக் கொந்தளிக்கும் சிரிப்பு இவனது தனி முத்திரை. தமிழறிஞர்களுக்குப் பணிவிடை செய்வதைப் பாக்கியமாய்க் கருதுபவன். பல தமிழறிஞர்கள் அவனது அந்தப் பணிவினை, அவனது பலவீனமாய்க் கருதிப் பயன்படுத்தவும் செய்தார்கள். பின்னாளில் லண்டன் சென்று நிறைய உழைத்தான். அங்கும் தமிழ் நோக்கிய ஆசையில் நிறைய இழந்தான். அளவுக்கதிகமான உணர்ச்சிகரம் இவனது குறை. உளச்சுத்தம் இவனது நிறை. இன்று அவன் வாழ்க்கை லண்டனில் எங்களின் பதித்த அன்பு அப்படியே இருக்கிறது.

**பபா, யோகநாதன், சிறீதரன்**

பபா என்கின்ற கோகுலராஜ் திருகோணமலையைச் சேர்ந்தவன். யோகநாதன் வன்னியைச் சேர்ந்தவன். சிறீதரன் காரைநகரைச் சேர்ந்தவன். யாழில் கடைசியாய் நடந்த கம்பன் விழாக்களில் இவர்கள் எம்மோடு இணைந்தார்கள். பபா விழா நாட்களில் ஆர்வமாய்ப் பணியாற்றுவான். மற்றைய இருவரும் எங்கள் நிகழ்ச்சிகளில் பேசியிருக்கிறார்கள். மணிமாறன் இடையில் நாம் கொடுத்த கழகச் செயலாளர் பதவியை, சரிவரச் செய்யாததால் சில காலம் சிறீதரனை அப்பதவியில் நியமித்தோம். பின்னர் அவனும் அப்பதவியில் நிலைக்காமல் போனான். இன்று சிறீதரனும், யோகநாதனும் அரசில் பெரும் பதவி வகிக் கின்றனர். 1995 இல் நாம் இடம் பெயர்ந்த பின்பு இவர்களது தொடர்பு குறைந்து போயிற்று.

**மணிகண்டன், மயூரன்**

இவ்விருவரும் இக்காலத்தில் கம்பன் கழகத்தில், இணைந்து செயற்பட்டார்கள். மணிகண்டன் சுருவில் மாணிக்கத்தின் மருமகன். மயூரன் என் அக்காவின் மகன். ஆனால், தம் வாழ்வென்று வந்ததும் கழகம் பற்றிய அக்கறையை முற்றாய்க் கைவிட்டு, சுயநலமாய் நடந்து கொண்டனர். இன்று இவ்விருவரும் வெளிநாடுகளில் வாழ்கின்றனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையினரின் சமூக சேவைப் பிரிவினரின் ஊடாக சிங்கப்பூர் சகோதரத்துவ அமைப்பினர் அண்மையில் யாழ். ஒஸ்மானியக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டு கலந்துரையாடல்களை நடத்தி மதிய உணவுப் பொருள்களை மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கிய போது ... (இ-19)




யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை பெண் சாரணியர் அணி புதிதாக ஆரம்பிக்கப்பட்டபோது சாரணியத்தின் பிரமுகர்களும், பழைய மாணவர்களும், அதிபர், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (இ-19)








யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியின் கால்கோள் விழா கடந்த திங்கட்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். தேவகுமாரன், கனடா கிளை பழைய மாணவர் சங்கத்தின் பிரதித் தலைவர் சி.அகிலன், செயலாளர் எஸ்.சுரேன் மற்றும் ஜெகதீசன் (செயலாளர்) ஆர்.ரவீந்திரன் (பொருளாளர்) மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களையும் சைக்கிள் மற்றும் வயலின் ஆகியவற்றையும் அன்பளிப்புச் செய்தனர். அந்நிகழ்வின் பதிவுகள்... (இ-19)






விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் 14 ஆம் வட்டாரத்திற்கான வேட்பாளர்களான எஸ்.மயூரன், செல்வி. அருட்சோதி ஆகியோருடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் யாழ். மாநகர சபைக்கான வேட்பாளர் ஆசிரியர் தர்ஷானந்த் கலந்துகொண்டு தேர்தல் பரப்புரை மேற்கொண்டபோது ... (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வினாத்தாள் 8 பகுதி- I இன் தொடர்ச்சி...


17. A, B, C என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகப்பெரிய இலக்கத்தின் பெருக்கமாக அமையும் எண் யாது?

(1) 438


(2) 472


(3) 432





18. 

ஆகும். கீழே தரப்பட்டுள்ள எத்தொடர்பு சரியானது?

(1) 

(2) 

(3) 

19. வர்த்தகக் கண்காட்சி ஒன்று இவ்வருடம் பெப்ரவரி 22ஆந் திகதி செவ்வாய்க்கிழமை தொடங்கியது. பெப்ரவரி 24ஆம் திகதி பொதுவிடுமுறை தினமாகும். அரச விடுமுறை நாட்களில் வர்த்தகக் கண்காட்சி இடம்பெறு வதில்லை. வர்த்தகக் கண்காட்சி 6 நாட்கள் இடம்பெற்றது. வர்த்தகக் கண்காட்சி நிறைவடைந்த திகதி யாது?

(1) பெப்ரவரி 27ஆம் திகதி

(2) மார்ச் 1ஆம் திகதி

(3) மார்ச் 2ஆந் திகதி

20. உடலாரோக்கியத்துடன் உள்ள மாட்டுப் பண்ணையொன்றில் உள்ள மாடுகளின் தலைகளினதும் கால்களினதும் கூட்டுத்தொகை 245 ஆகும். அப்பண்ணையில் உள்ள மாடுகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 29 (2) 39 (3) 49

21. இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தம் தென், சப்பிரகமுவ, மேல் மாகாணங்களில் பெரும் உயிர்ச்சேதங்களையும் பொருட் சேதங்களையும் ஏற்படுத்தியிருந்தது. இச்செய்தியின்படி இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நகரங்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

(1) காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை

(2) காலி, இரத்தினபுரி, களுத்துறை

(3) களுத்துறை, இரத்தினபுரி, மாத்தளை




# கல்விக் கதிர் வெளியீடு




## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்


வினாத்தாள் 8




தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி I நேரம்- 45 நிமிடம்

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப 01 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
- 01ஆம், 02ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவில் குறைவாக இருக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

01. 

(1)  (2)  (3) 

02. 

(1)  (2)  (3) 

03. இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவுசெய்க.

(1) 1 2 3 4 5 6 7 - 1 2 3 4 6 5 7

(2) PQRSTUV - PQRSTUV

(3) △○◇□✡☆★ - △○□◇✡☆★


04. ★▲❑❑△■❍❍ = 31445622

இதற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

❍■▲❑▲❍■ = ........................

(1) 2614126 (2) 2614621 (3) 2614216

05. எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.




(1) 8

(2) 20

(3) 22

06. பேருந்து - பேருந்து தரிப்பிடம் எனின், புகையிரதம் -

(1) புகையிரதக் கடவை

(2) புகையிரத நிலையம்

(3) புகையிரதப் பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



07. 275, 225, 241, 234 என்னும் எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது கிடைக்கும் முதலாம் எண்ணினதும் மூன்றாம் எண்ணினதும் நடுவில் இருக்கும் இலக்கங்கள் முறையே

1) 2, 4 2) 2, 3 3) 2, 7

08. எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.




(1) 18

(2) 7

(3) 14

09. அடைப்பில் உள்ள மிகச் சிறிய ஒற்றை எண்ணால் மிகப் பெரிய ஒற்றை எண்ணை வகுப்பதன் மூலம் கிடைக்கும் விடை யாது?

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 5 | 4 | 23 | 15 |
| 7 | 19 | 33 | 8 | 3 |
| 10 | 2 | 30 | 17 | 29 |

(1) 10
(2) 11
(3) 9

10. எல்லாப் பிள்ளைகளும் திறமையானவர்கள். திறமை அற்றவர்கள் என்று எதுவுமில்லை.
அவ்வாறெனின்

(1) எல்லாப் பிள்ளைகளும் திறமை அற்றவர்கள்.
(2) சில பிள்ளைகள் மட்டும் திறமையானவர்கள்.
(3) பிள்ளைகள் எல்லோரும் திறமையானவர்கள்.


11. ஒரு கம்பித்துண்டு இருசம பகுதிகளாக வெட்டப்பட்டு, அவற்றின் ஒரு பகுதி மறுபடியும் நான்கு சம துண்டுகளாக வெட்டப்பட்டது. அத்துண்டு ஒன்றின் நீளம் 1.5 மீற்றர் எனின் தொடக்கத்தில் இருந்த கம்பித்துண்டின் நீளம் யாது?

(1) 12m (2) 6m (3) 8m

12. சம கனவளவுகளைக் கொண்ட திரவம் உள்ள குவளையையும், நீர் உள்ள குவளையையும் எடுத்து நீர்க்குவளையில் இருந்து 10 மில்லிலீற்றர் நீரை திரவக் குவளைக்குள்ளே விட்டுக் கலக்கி, அக்கலவையில் இருந்து 10 மில்லிலீற்றரை மறுபடியும் நீர்க்குவளைக்குள் இடப்பட்டது. இப்போது இரு குவளைகளிலும் இருக்கும் திரவத்தின் அளவில்

(1) திரவத்தின் அளவில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை
(2) திரவத்தின் அளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
(3) நீர்க்குவளையுள்ள திரவத்தின் அளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது




13. 

அருகிலுள்ள மாதிரி இயந்திர மனிதனின் உருவாக்கம் தொடர்பாக பின்வரும் எக்கூற்று சரியானது?

(1) முக்கோணிகளின் எண்ணிக்கை வட்டங்களின் எண்ணிக்கைக்குச் சமன்.
(2) செவ்வகங்களின் எண்ணிக்கை வட்டங்களின் எண்ணிக்கையின் இருமடங்காகும்.
(3) முக்கோணிகளின் எண்ணிக்கை செவ்வகங்களின் எண்ணிக்கையின் இருமடங்காகும்.

14. குறித்த ஒரு நாளில் பாடசாலை ஒன்றில் ஒழுங்குபடுத்தப்பட்ட சிரமதானத்தில் பல தரங்களினதும் ஒவ்வொரு வகுப்பும் சிரமதானத்தைத் தொடங்கிய நேரங்கள் கீழே உள்ள கடிகார முகங்களில் காணப்படுகின்றன. சிரமதான நிகழ்வு காலையில் ஆரம்பித்தது.



தரம் 5 தரம் 4 தரம் 3 தரம் 2

ஒரு வகுப்பு சிரமதானம் முடிவடைந்தவுடன் அடுத்த வகுப்பு சிரமதானம் ஆரம்பமானது. தரம் 2 வகுப்பு சிரமதானம் ஒரு மணித்தியாலம் நடைபெற்றது. குறைவான, கூடுதலான நேரம் சிரமதானத்தில் ஈடுபட்ட வகுப்புக்கள் முறையே

(1) தரம் 5, தரம் 3 (2) தரம் 3, தரம் 2 (3) தரம் 3, தரம் 5

15. 12 மாணவர்களுக்கும் 6 ஆசிரியருக்கும் குளிர்பானம் வழங்குவதற்கு 500ml பழரசப் போத்தல் தேவைப்பட்டது. அதற்கேற்ப 60 மாணவர்களுக்கும் 30 ஆசிரியர்களுக்கும் குளிர்பானம் வழங்குவதற்கு எத்தனை பழரசப் போத்தல்கள் தேவை?

(1) 7 (2) 10 (3) 5

16. நீளம், அகலம், உயரம் ஆகியன 6cm வீதம் உள்ள ஒரு மரச்சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் 1cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 36 (2) 216 (3) 116

# தலிபான்கள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்


## அமெ. கிடுகுப்பிடி

ஆப்கானிஸ்தானில் நடந்த ஹோட்டல் மீதான தாக்குதலுக்கு பொறுப்பு ஏற்று கொண்ட தலிபான்கள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள சொகுசு ஹோட்டலில் பயங்கரவாதிகள் கடந்த வாரம் அதிபயங்கரத் தாக்குதல்களை நடத்தினர். இந்தத் தாக்குதல்களில், வெளிநாட்டினர் உள்ளிட்ட ஏதும் அறியாத அப்பாவி மக்கள் 22 பேர் கொல்லப்பட்டனர். இந்தத்தாக்குதல்களுக்குத் தலிபான் பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்று கொண்டுள்ளது.

இந்த நிலையில், தலீபான் தலைவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கூடுதல் அழுத்தம் கொடுத்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதியின் வொஷிங்டன் வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ், நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர், தலிபான் தலைவர்களை பாகிஸ்தான் கைது செய்ய வேண்டும் அல்லது அங்கு இருந்து உடனே வெளியேற்ற வேண்டும். தலிபான் பயங்கரவாதிகள் தனது நாட்டில் இருந்து செயற்படுகின்றமையை பாகிஸ்தான் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.



# தொழுகை முடித்து வந்தவர்கள் மீது கார்க் குண்டுத் தாக்குதல்; 22 பேர் சாவு

## லிபியாவில் பயங்கரம்



லிபியாவில் மசூதியில் தொழுகை முடித்து வந்தவர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டுத் தாக்குதலில் 22 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

லிபியா நாட்டின் பெங்காஷி நகரில் அல் சல்மானி மாவட்டம் அமைந்துள்ளது. இங்குள்ள மசூதியில் நேற்று முன்தினம் மாலை தொழுகை நடைபெற்றது. தொழுகை முடிந்து பொது மக்கள் வெளியே வந்த சமயம் அங்கு இரண்டு கார்களில் இருந்த வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறின.

இந்த இரட்டைக் கார் வெடிகுண்டு தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 22 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து மீட்பு படையினர் அங்கு விரைந்து வந்தனர். அவர்கள் பலியான உடல்களைப்பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். படுகாயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். இந்த கார் வெடிகுண்டு தாக்குதலில் பலியானவர்களில் பொது மக்களும், பொலிஸாரும் அடங்குவார்கள். காயம் அடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# குர்திஷ் ஆயுதக் குழுவுக்கான ஆதரவை அமெரிக்கா உடன் நிறுத்தல் வேண்டும்

## துருக்கி வலியுறுத்தல்

அங்காரா,ஜன.25

சிரியாவில் குர்திஷ் ஆயுதக்குழுவுக்கு அளிக்கும் ஆதரவை அமெரிக்கா நிறுத்திக்கொள்ள வேண்டும்என்றுதுருக்கி அரசு வலியுறுத்தியுள்ளது.

சிரியாவில் செயற்பட்டு வரும் குர்திஷ் ஆயுதக் குழுவை (வை.பி.ஜி) ஒழித்துக்கட்டும் இராணுவ நடவடிக்கையை துருக்கி தீவிரப்படுத்தியுள்ளது. கடும் விமானத் தாக்குதலைத் தொடர்ந்து, சிரியாவின் எல்லைக்குள் துருக்கி தரைப்படையும் தற்போது நுழைந்து தாக்குதலை நடத்தி வருகிறது. அவர்களுக்கு உதவியாக துருக்கி ஆதரவு கிளர்ச்சிக் குழுவினரும் இணைந்து முன்னேறி வருகின்றனர்.

'ஒப்ரின் ஒப்பரேசன்' என்ற பெயரில் நடத்தப்படும் இந்தத் தாக்குதல் வெகு விரைவில் நிறைவடையும் என துருக்கி அதிபர் எர்டோகன் கூறியுள்ளார்.



இந்த நிலையில், குர்திஷ் ஆயுதக் குழுவிற்கு அளித்து வரும் ஆதரவை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என துருக்கி வலியுறுத்தி உள்ளது. இதுபற்றி துருக்கி அதிபரின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில்–

துருக்கியின் தெற்கு எல்லையை ஒட்டி சிரியாவின் ஒப்ரின் பிராந்தியம் உள்ளது. இங்கு வலுவாகக் காலூன்றியுள்ள குர்திஷ் ஆயுதக் குழு, சிரியாவின் வடக்குப் பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது. இந்த குழுவுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கிறது. சிரியாவில் ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக சண்டையிட்ட அமெரிக்க ஆதரவுப் படையில் குர்திஷ் இராணுவக் குழு முக்கிய பங்கு வகித்தது.

தற்போது ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான சண்டை முடிவடைந்து விட்டதால் குர்திஷ் ஆயுதக் குழுவுடனான கூட்டணியை அமெரிக்கா முறித்துக்கொள்ள வேண்டும் எனவும் துருக்கி வலியுறுத்தி வருகிறது.

ஈரானுக்கு ஏவுகணைகள் ஏற்றுமதி:

# மூன்றாம் உலகப்போருக்கு தயாராகும் வடகொரியா?

ஈரானுக்குக் கப்பல்கள் மூலம் கள்ளத்தனமாக வடகொரியா ஏவுகணைகள் ஏற்றுமதி செய்யும் கிம் ஜாங் உன்னின் செயல் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகை செய்யும் என அணு ஆயுத வல்லுநர் கோர்டான் சங் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாடுகளின் கண்டனங்களைப் புறம் தள்ளி ஏவுகணை மற்றும் அணு ஆயுதப் பரிசோதனைகளை வட கொரியா நடத்தியுள்ளது. இதன் காரணமாக, அந்நாட்டின் மீது ஐ.நா சபை பல்வேறு தடைகளை விதித்தது. தற்போது, கள்ளத்தனமாக ஈரானுக்கு ஏவுகணைகளைவடகொரியாவழங்கியுள்ளது எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

நியூக்கிளியர் டட்வுன் என்ற புத்தகத்தின் ஆசிரியரும், கிழக்காசிய நாடுகளில் அணு ஆயுத நடவடிக்கைகளை கண்காணித்துவரும்கோர்டான் சங் என்பவர் பிரிட்டனைச் சேர்ந்த எக்ஸ்பிரஸ் இணையத் தளத்தில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

அதில், ஈரானுக்குக் கப்பல்கள் மூலமாக வடகொரியா கள்ளத்தனமாக ஏவுகணைகளை ஏற்றுமதி செய்துவருகிறது. இதனை அமெரிக்கா தடுக்க வேண்டும். இதனை நாம் அனுமதிக்கக் கூடாது. இதை அனுமதித்தால், அது மூன்றாம் உலகப்போருக்கு வழிவகை செய்யும். ஐ.நா தனது விதிமுறைகளை செயற்படுத்தா விட்டாலும், அமெரிக்கா செய்ய வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

குறைந்த பட்சம் வடகொரியக்கப்பல்கள் அதன் கடல் எல்லையில் ஆயுதங்களை விற்பனை செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

# ஜப்பானில் எரிமலை வெடித்துச் சிதறியது

## ராணுவ வீரர் பலி; ஐவர் படுகாயம்

டோக்கியோ, ஜன.25

ஜப்பானில் தலைநகர் ரோக்கியோவில் குசட்சு ஷிரேன் என்ற எரிமலை வெடித்துச் சிதறியதில் ராணுவ வீரர்கள் 5 பேர் படுகாயம் அடைந்ததுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஜப்பானில் தலைநகர் டோக்கியோவில் இருந்து 150 கிலா மீற்றர் தொலைவில் குசட்சு ஷிரேன் என்ற எரிமலை உள்ளது. இந்த எரிமலையில் நேற்று முன்தினம் கடுமையான சீற்றம் ஏற்பட்டு வெடித்துச் சிதறத்தொடங்கியது.

இந்தநிலையில், அந்தப் பகுதியில் 6 இராணுவ வீரர்கள் குளிர் காலப் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர்.

எரிமலை வெடிப்பின் காரணமாக, அதில் இருந்து ஒரு கிலா மீற்றர் பரப்பளவில் பாறைகள் வந்து விழுந்தன. அவற்றில், போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வந்த இராணுவ வீரர்கள் சிக்கிக்கொண்டனர். உடனடியாக மீட்புப்படையினர் அங்கு விரைந்தனர். சிக்கிய இராணுவ வீரர்கள் 6 பேரும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்தமையை இராணுவ அமைச்சகம் உறுதி செய்துள்ளது.

ஜப்பானில் ஆன்டேக் என்றஎரிமலை 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் திடீரென வெடித்து சிதறியபோது அதில் சிக்கி 63 பேர் உயிரிழந்தமை நினைவு கூரத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir



# உயர்த்தப்பட்ட சம்பளம் வேண்டாம் சபாநாயகருக்கு தினகரன் கடிதம்

எம்.எல்.ஏக்களுக்காக உயர்த்தப்பட்ட சம்பளம் வேண்டாம் எனவும் சட்டப் பிரேரணை நிறைவேறுவதற்கு முன்பு இருந்த சம்பளத்தையே தனக்கு வழங்கும்படியும் சபாநாயகருக்கு, தினகரன் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக சட்டசபை சபாநாயகர் ப.தனபாலுக்கு, ஆர்.கே.நகர் தொகுதி எம்.எல்.ஏ. டி.டி.வி. தினகரன் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பவை வருமாறு:-

எம்.எல்.ஏ.க்களுக்கு சம்பளம் மற்றும் படி ஆகியவை சேர்த்து மாதந்தோறும் 55 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் கடந்த 12ஆம் திகதியன்று இந்தத் தொகையை ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தும் சட்டப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டது.

அதைச் சட்டசபையில் அறிமுக நிலையிலேயே எதிர்த்தேன். மக்கள் நலத்திட்டங்களைச் செயற்படுத்தவும், பல திட்டங்களைச் செயற்படுத்த முடியாத அளவுக்கு நிதி பற்றாக்குறை இருப்பதாலும் அதற்கு நான் எதிர்ப்பு தெரிவித்தேன்.

ஆனாலும், எம்.எல்.ஏக்களுக்கு சம்பளத்தை உயர்த்தும் அந்த சட்டப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. எனவே உயர்த்தப்பட்ட சம்பள உயர்வை நான் விட்டுக் கொடுக்கிறேன். சட்டப் பிரேரணை நிறைவேறுவதற்கு முன்பு இருந்த சம்பளத்தையே எனக்கு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.



## வருமான வரித்துறை நோட்டீஸ்:

# மௌன விரதம் இருப்பதால் நேரில் ஆஜராக முடியாதாம்



சசி பதில்

பெங்களூர்,ஜன.25

வருமான வரித்துறையின் நோட்டீஸுக்கு சசிகலா பதில் கடிதம் அனுப்பி இருக்கிறார். அதில் மௌன விரதம் இருப்பதால் நேரில் தன்னால் ஆஜராக இயலாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சசிகலா மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள், உறவினர்களின் வீடுகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் கடந்த ஆண்டு சோதனை நடத்தினர். தமிழ்நாடு முழுவதும் 150 இற்கும் மேற்பட்ட இடங்களில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. இது நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. கணக்கில் வராத ஏராளமான சொத்து ஆவணங்கள், தங்க நகைகளை வருமான வரித் துறையினர் பறிமுதல் செய்தனர் எனக் கூறப்பட்டது.

இதுதொடர்பாக இளவரசியின் மகன் விவேக், மகள் கிருஷ்ண பிரியா, டி.டி.வி.தினகரனின் ஆதரவாளர் புகழேந்தி உள்ளிட்டோர் வருமான வரித்துறை அதிகாரிகள் முன்னிலையில் ஆஜராகி அதிகாரிகள் கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் பதில் அளித்தனர். இந்த சோதனையின் தொடர்ச்சியாக மீண்டும் சசிகலாவின் குடும்பத்தினருடைய வீடு மற்றும் அலுவலகங்களில் சோதனை நடைபெற்றது.

இந்த நிலையில், சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவுக்கும் வருமான வரித்துறை அதிகாரிகள் நேரில் ஆஜராகும்படி நோட்டீஸ் அனுப்பி இருந்தனர். வருமான வரித்துறை அதிகாரிகளின் இந்த நோட்டீஸுக்கு சசிகலா, சிறை நிர்வாகம் மூலம் பதில் கடிதம் அனுப்பி இருக்கின்றார்..

அந்தக் கடிதத்தில் அவர், நான் பெப்ரவரி 10ஆம் திகதி வரை மௌன விரதம் இருக்கிறேன். அதனால் என்னால் உங்கள் முன்னிலையில் ஆஜராக இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விரதம் முடிந்த பிறகு நேரில் ஆஜராகின்றமை தொடர்பாகத் தகவல் தெரிவிக்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# நோக்கம் கஜானா மீது இல்லை மக்களை நோக்கிச் செல்வதே!

## கமலஹாசன் பேச்சு



சென்னை,ஜன.25

புதிய கட்சிக்கான ஆயத்த பணிகளில் இருக்கும் நடிகர் கமலஹாசன், நமது நோக்கம் கஜானா மீது இல்லை, மக்களை நோக்கிச் செல்வதே என ரசிகர்கள் மத்தியில் பேசியுள்ளார்.

நடிகர் கமலஹாசன் அடுத்த மாதம் பெப்ரவரி 21ஆம் திகதி தனிக் கட்சி தொடங்கி அரசியல் சுற்றுப் பயணத்தை தொடங்கப் போகிறேன் என அறிவித்து இருக்கிறார். ராமேஸ்வரத்தில் உள்ள மறைந்த ஜனாதிபதி அப்துல்கலாம் வீட்டில் இருந்து இந்த அவர் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார்.

சுற்றுப் பயண ஏற்பாடுகள் தொடர்பாக ஆலோசிக்கச் சென்னையில் ரசிகர்களை கமலஹாசன் சந்தித்தார். ஆழ்வார்பேட்டையில் உள்ள அலுவலகத்தில் இந்தக் கூட்டம் நடந்தது. இதில் ராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்த ரசிகர் மன்ற நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கூட்டம் நிறைவடைந்ததை அடுத்து ரசிகர்கள் மத்தியில் கமல் பேசினார். அப்போது அவர் கூறியவை வருமாறு-

ரசிகர்களைச் சந்திப்பது வழக்கமானது என்றாலும், தற்போது அதன் இலக்கு மாறியுள்ளது. இந்தப் பயணத்தின் நோக்கம், கஜானாவை நோக்கியது அல்ல, மக்களை நோக்கிச் செல்வது. மக்களை நோக்கிய இந்த பயணம் தொடங்கி 37 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த பயணம் விரைவாகவும் நல்லபடியாகவும் இருந்தாக வேண்டும்.

சாதி என்ன, மதம் என்ன என்ற கேள்வியும் எழுந்தது கிடையாது, இனியும் அப்படித்தான் இருக்கும். இனி நீங்கள் எந்தக் கட்சி எனக் கேட்டு உறுதி செய்து கொள்வோம். சாதி, மதங்களைக் கடந்த பயணமாக இது இருக்கும். வெற்றியை நோக்கி நாம் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

மக்களை நோக்கிய பயணம் என்பதால் நிச்சயம் வெற்றி பெறுவோம் எனக் கூறுகிறேன். ரசிகர்கள் பிதற்றலான சுவரொட்டிகள் எதுவும் ஒட்ட வேண்டாம், கண்ணியம் காக்கப்பட வேண்டும். நாம் யாரையும் தேவையில்லாமல் சாட வேண்டாம், நானும் திருத்திக்கொள்வேன். நமக்கு விரோதிகள் என்பவர்கள் சமூகத்திற்கும் விரோதிகள்தான் என்று தெரிவித்தார்.

# மோடியைப் போன்று ஆங்கிலம் உச்சரித்து நக்கலடித்தார் ட்ரம்ப்!



வொஷிங்டன்,ஜன.25

பிரதமர் மோடியின் ஆங்கில உச்சரிப்பை ட்ரம்ப் மிமிக்ரி செய்து பேசியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு வெள்ளை மாளிகையில் இருந்து இதுவரை எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

பிரதமர் நரேந்திரமோடி கடந்த வருடம் ஜூன் மாதம் அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது அந்த நாட்டின் அதிபர் டொனால்ட் ட்ரம்பைச் சந்தித்தார். அப்போது ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகள் குவிக்கப்பட்டமை தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

அப்போது ஆப்கானிஸ்தான் தொடர்பாக மோடி கூறுகையில், 'சிறு லாபத்திற்காக இந்த அளவுக்கு அதிக முக்கியத்துவம் தரும் வேறு நாட்டைப் பார்க்க முடியாது என்று தெரிவித்து இருந்தார். அவர் அமெரிக்காவை புகழ்ந்தே கூறியிருந்தார்.

ஆனால், பிரதமர் மோடியின் கருத்து ட்ரம்புக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. உலக நாடுகள் அமெரிக்காவை ஆதாயம் தேடும் ஒரு நாடாக பார்க்கிறது என மோடி பேசினார் என அவர் தவறாக கருதினார்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற அதிகாரிகளுடனான ஆலோசனை கூட்டத்தில் பிரதமர் மோடியின் ஆங்கில உச்சரிப்பை ட்ரம்ப் மிமிக்ரி செய்து கிண்டலடித்து பேசியுள்ளார். இந்தியாவில் ஆங்கிலத்தை உச்சரிக்கும் முறையிலேயே அவர் பேசி இருக்கிறார்.

இத்தகவலை அமெரிக்காவில் இருந்து வெளியாகும் ஒரு முன்னணி நாளிதழ் வெளியிட்டுள்ளது. ட்ரம்ப் இந்திய ஆங்கில உச்சரிப்பை கேலி செய்யும் வழக்கம் உடையவர் என்று கருதப்படுகிறது. இருந்தாலும் இந்திய பிரதமரின் பேச்சை இவ்வாறு மிமிக்ரி செய்து பேசியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா சென்ற போது மோடியைத் தனது உண்மையான நண்பர் என ட்ரம்ப் டுவிட்டரில் குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில் தற்போது இப்படியொரு சர்ச்சை வெடித்துள்ளது. இதற்கு வெள்ளை மாளிகையில் இருந்து விளக்கம் அளிக்கவில்லை.

# கமல் சினிமாவில் நடித்து கஜானாவை நிரப்பியவர்

## இப்படிக் கூறுகிறார் தமிழிசை

சென்னை, ஜன.25

கஜானா குறிக்கோள் இல்லை என்று சொல்லும் கமலஹாசன் தன் வாழ்நாளில் பாதிநாள்கள் சினிமாவில் நடித்து கஜானாவை நரப்பி உள்ளார் என்று தமிழக பா.ஜனதா கட்சி தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறினார்.

பா.ஜனதா எப்போதும் தமிழ்நாட்டு மக்களுடன் இருக்கிறது. மத்தியிலும் பெரும்பாலான மாநிலங்களில் பா.ஜனதா ஆட்சியில் இருக்கிறது. அப்படிப்பட்ட அதிகாரத்தில் இருப்பவர்களால்தான் தமிழகத்தில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

தற்போது பலபேர் மாற்றத்தை கொண்டுவரப் போகின்றனர் என கிளம்பி உள்ளனர். அதற்காகச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கின்றனர். கஜானா குறிக்கோள் இல்லை என்று சொல்லும் ஒருவர் (கமல்) தான் வாழ்நாளில் பாதிநாள்கள் சினிமாவில் நடித்து கஜானாவை நிரப்பி உள்ளார்.

இனி தமிழகம் பரிசோதனைக் களமாக இருக்காது. திராவிட கட்சிகள் ஊழலால் நிரம்பி இருக்கின்றன. பா.ஜனதாவால் மட்டுமே மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்று தெவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## U-19 உலகக் கிண்ணம்:

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய பாகிஸ்தான்

U-19 உலக கிண்ணக் கிரிக்கெட்டின் காலிறுதி போட்டியில், தென்னாபிரிக்கா அணியை மூன்று விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

U-19 உலகக்கிண்ணப்போட்டிகள் நியூஸிலாந்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் பாகிஸ்தான் – தென்னாபிரிக்கா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 189 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் முகமத் மூசா 3 விக்கெட்டுகளும், ஷாஹீன் அப்ரிடி 2 விக்கெட்டுகளும், அர்சத் இக்பால், ஹசன் கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர்.

இதையடுத்து, 190 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பாகிஸ்தான் அணி களமிறங்கியது. பாகிஸ்தான் அணி 47.5 ஓவர்களில் 7 விக்கெட்டு இழப்பிற்கு 190 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அலி சர்யாப் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்கள் எடுத்தார்.

தென்னாபிரிக்கா அணி சார்பில் ஜேசன் நீமாண்ட் 2 விக்கெட்டும், ஜெரால்ட் கோட்சீ, அகோனா நியாகா, ஹெர்மான் ரோல்ப்ஸ், காடிஸ் மோல்பே, ஜேட் டி கிலெர்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். அலி சர்யாப் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். (பு)






# FIFA வெற்றிக் கிண்ணம் ஜனாதிபதியிடம் கையளிப்பு!

எதிர்வரும் ஜுலை மாதம் ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் இடம்பெறவுள்ள 2018 உலகக்கிண்ண உதைபந்துப்போட்டித்தொடரின் வெற்றிக்கிண்ணம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதுடன், அதனை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் கோட்டை, ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

உலகம் முழுவதும் ஆறு கண்டங்களைச் சேர்ந்த 54 நாடுகளுக்கு மக்களின் பார்வைக்காகக் கொண்டு செல்லப்படவுள்ள வெற்றிக்கிண்ணத்தின் முதலாவது பயணமாக அது இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், உலகக்கிண்ண உதைபந்துப் போட்டியின் வெற்றிக்கிண்ணம் இவ்வாறு இலங்கைக்கு கொண்டு வரப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய விசேடவிமானத்தின் மூலமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வெற்றிக்கிண்ணத்தை இலங்கை ரசிகர்கள் கண்டு களிப்பதற்காக நேற்றைய தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

நேற்று முற்பகல் இடம்பெற்ற வெற்றிக்கிண்ணத்தை ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வில் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் தலைவர் அநுர டி சில்வா மற்றும் இலங்கை உதைபந்துக் குழுவின் உறுப்பினர்களும் 1998 ஆம் ஆண்டின் உலகக் கிண்ண உதைபந்து வெற்றிக்கிண்ணத்தை வெற்றி கொண்ட பிரான்ஸ் உதைபந்துக் குழுவினரும் பங்குபற்றினர். (பு)

# 8 விக்கெட்டு வீழ்த்தி ஆஸி. வீரர் சாதனை

நியூஸிலாந்தில் நடைபெற்று வரும் U19 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலியா வீரர் 8 விக்கெட் வீழ்த்தி சாதனைப் படைத்துள்ளார்.

U19 உலகக்கிண்ணம் நியூஸிலாந்தில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதியில் ஆஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் துடுப்பாடிய ஆஸ்திரேலியா 33.3 ஓவர்கள் மட்டுமே விளையாடி



127 ஓட்டங்களில் சுருண்டது. 3ஆவது வீரராகக் களம் இறங்கிய கப்டன் சங்கா அதிகபட்சமாக 58 ஓட்டங்கள் சேர்த்தார். இங்கிலாந்து அணி சார்பில் பம்பர், பென்னிங்டன், ஜேக்ஸ் தலா மூன்றுவிக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

பின்னர் 128 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களம் இறங்கியது. தொடக்க வீரர் டாம் பான்டான் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், மறுமுனையில் உள்ள வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்கள்.

ஒரு கட்டத்தில் இங்கிலாந்து 7.2 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 47 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இதனால் இங்கிலாந்து எளிதாக வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், 8ஆவது ஓவரை ஆஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளர் போப் வீசினார். இவரது சுழலில் இங்கிலாந்து சிக்கி வீழ்ந்தது.

போப் 9.4 ஓவர்கள் வீசி 35 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 8 விக்கெட்டுக்கள் கைப்பற்றினார். இதன் மூலம் U19 உலகக் கிண்ணப் போட்டியில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய 2 ஆவது வீரர் என்ற பெயரைப் போப் பெற்றுள்ளார்.

U19 கிரிக்கெட்டில் இந்திய வீரர் இர்பான் பதான் 9 விக்கெட்டுக்களை வீழ்த்தியதே உலக சாதனையாக இருந்து வருகிறது. (பு)

# ஜொகன்னஸ்பர்க் டெஸ்ட்: இந்திய அணி ஆக – 187

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலில் துடுப்பாட்டம் செய்துவரும் இந்திய அணி தடுமாற்றத்துடன் விளையாடி வருகின்றது.

டெஸ்ட் தொடரைப் பறிகொடுத்த நிலையில், இந்தியா – தென்னாபிரிக்கா இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள நியூ வோண்டரர்ஸ் ஸ்டேடியத்தில் நேற்று ஆரம்பமாகியது.

இந்திய அணியின் கப்டன் விராட் கோஹ்லி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். இந்திய அணி அஸ்வினுக்கு பதிலாக புவனேஸ்வர் குமாரும், ரோகித் சர்மாவுக்கு பதிலாக ரகானேவும் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்திய அணியின் முரளி விஜய், லோகேஷ் ராகுல் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். ராகுல், ஓட்டம் ஏதும் எடுக்காத நிலையில் பவிலியன் திரும்பினார்.

எனினும் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 187 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந் தது.

நேற்று மாலையில் பதிலுக்குத் துடுப்பாட்டத்தைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி நேற்று முதல் நாள் ஆட்ட நேர முடிவின் போது ஒரு விக்கெட் இழப்புக்கு 6 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

இன்று ஆட்டத்தின் இரண்டாவது நாளாகும்.





# பயகோடா அதிரடியால் கென்யாவை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி

U19 உலகக் கிண்ணக் காலிறுதிப் போட்டியில், பயகோதா அதிரடியால் கென்யாவை வீழ்த்தி இலங்கை அணி அபார வெற்றி பெற்றது.

U19 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நியூஸிலாந்தில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இலங்கை – கென்யா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக தனஞ்ஜெயா லக்ஷனும், பயகோடாவும் களமிறங்கினர். தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக விளையாடிய பயகோடா தனது அதிரடியைக் காட்டினார். 152 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 28 பவுண்ரிகள் அடித்து 191 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 419 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து, கென்யா அணி 420 என்ற கடின இலக்கை நோக்கிக் களமிறங்கியது. ஆனால், கென்யா அணி 35.5 ஓவர்களில் 108 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

அதைத்தொடர்ந்து 311 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி அபார வெற்றி பெற்றது. (பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சென்றுகொண்டிருந்த போதே கடற்படையின் கவச வாகனம் இருவரையும் மோதித்தள்ளியுள்ளது.

இதன்போது அந்த சிறுமி சம்பவ இடத்திலே உயிரிழந்தார். அவரை ஏற்றிச்சென்ற மாமனார் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பவள் வாகனத்தை செலுத்தி வந்த கடற்படை சாரதி கைது செய்யப்பட்டார். விபத்துக்குள்ளான வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட பவள் வாகனத் தின்சக்கரங்கள்நான்கும்தேய்ந்து அவற்றின் ரயர் நூல் வெளியே வந்த நிலையில் இருந்தன எனச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கடற்படையின் உணவுகளைஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்பட்டுவந்த இப்பவள் வாகனம் இரவு நேரங்களில் ஒற்றை விளக்குடனேயே வீதிகளில் செல்வதாகவும் அப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளமை சுட் டிக்காட்டத்தக்கதாகும்.

## ரவியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறுப்பினருமான ரவி கருணாநாயக்க சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும், ஒழுங்குப்பத்திரத்துக்குஅமைய அந்த விடயம் நாடாளுமன்றத்திற்கு வெளியில் நடந்ததாகக் கூறிக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அனுமதிமறுத்தார்சபாநாயகர்.

நாடாளுமன்றம் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நேற்று பிற்பகல் 1 மணிக்குக் கூடியது. தினப் பணிகள் முடிந்த பின்னர் விவாதத்திற்குச் செல்ல சபாநாயகர் அழைப்பு விடுத்தார். இதன்போது எழுந்த ரவி கருணாநாயக்க, சிறப்புக் கேள்வியொன்றைஎழுப்பினார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ்பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் பிணைமுறி விவகாரம் குறித்து விசேட உரையொன்றை நிகழ்த்த சந்தர்ப்பத்தைக் கோரி வருகின்றேன். ஆனால், அதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தை 24 வருடங்களுக்கு அதிகமாக நான் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளேன். இது பாரிய அநீதியாகும். நல்லாட்சியைநாங்கள் கொண்டு வந்ததமை அரசியல் செய்வதற்கில்லை. கடந்த அரசில்கூட சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமையின் பிரகாரம் எனக்கான சந்தர்ப்பத்தை வழங்கவேண்டுமென சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர்,

நீங்கள் உரை நிகழ்த்த கோரும் விடயம் நாடாளுமன்றத்திற்கு வெளியில் நடந்த சம்பவமாகும். இதுசிறப்புரிமை கேள்விக்கான சந்தர்ப்பமாக அமையாது. தற்போது இந்த உரைக்கு சந்தர்ப்பம் வழங்க முடியாது. – என்றார்.

## வாக்களிப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அலைபேசிகளைப்பயன்படுத்தி அல்லது புகைப்படக் கருவிகள் மூலம் வாக்குச் சீட்டுக்களைப் புகைப்படம் எடுத்தல், சட்ட விரோதச் செயற்பாடெனக் கருதிக்கைதுசெய்யப்படும்நிலைமை ஏற்படுத்தும் எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செய்து கொள்ளப்படாமல் தேசிய அரசு தொடர்வதால் சபையில் எதிர்க் கட்சிகள் அரசு மீது கடும் கேள்விக்கணைகளைத் தொடுத்து வாக்கு வாதத்தில் ஈடுபட்டன.

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று பிற்பகல் 1 மணிக்குக் கூடியது. கேள்வி நேரத்தைத் தொடர்ந்து பொது எதிரணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன எழுப்பிய கேள்வியாலேயே அரசுக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டிருந்தது.

ஐ.தே.க. – சு.க. இணைந்து தேசிய அரசை அமைத்துள்ளன. அரசமைப்பின் 46ஆம் சரத்தின் பிரகாரம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்த தொகை மீறப்பட்டுள்ளதைப் பிரதமர் ஏற்றுக் கொள்கிறாரா? ஸ்ரீயானி மற்றும் பியசேன கமகே ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளமை அரசமைப்பை மீறும் செயற்பாடு என்பதை ஏற்றுக் கொள்கிறாரா? 2017ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதியுடன் தேசிய அரசு தொடர்வதற்கான உடன்படிக்கை காலாவதியாகியுள்ளநிலையில், அமைச்சர்களின்எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பதைப் பிரதமர் ஏற்றுக்கொள்கிறாரா? – என்று தினேஷ் குணவர்தன கேள்வி யெழுப்பினார்.

இதன்போது குறுக்கிட்ட சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன்கிரியெல்ல,ஸ்ரீயானி விஜேவிக்ரமவுக்கு அமைச்சுப் பதவி கொடுத்தமையா உங்களுக்குப்பிரச்சினை எனநக்கல் அடித்தார். அதற்கு, 'ஸ்ரீயானியை உங்கள் பக்கத்தில் வேண்டும் என்றாலும் வைத்துக்கொள்ளுங்கள். எமக்குப்பிரச்சினையில்லை:– என்றுதினேஷ் குணவர்தன கோபமாகப் பதில் தந்தார்.

இதன்போதுகுறுக்கிட்டஜே.வி.பியின் தலைவரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க, தேசிய அரசு அமைக்கப்பட்டால் அமைச்சர்கள் 45 பேர் வரையும், பிரதி அமைச்சர்கள் 48 பேர் வரையும் நியமித்துக் கொள்ள முடியுமென அரசமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐ.தே.க. – சு.க., இடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை கடந்த செப்ரெம்பர்மாதம்வரையேசெல்லுபடியாகும். ஆனால், தேசிய அரசு இன்னமும் எவ்வித உடன்படிக்கையும் செய்து கொள்ளப்படாமல் தொடர்வது குறித்துநாடாளுமன்றத்திற்கும் சபாநாயகருக்கும் எவ்வித அறிவிப்போ அறிக்கையோ வழங்கப்படவில்லை. சபாநாயகரிடம்தேசிய அரசைநீடிப்பதற்கான அத்தாட்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளனவா என்று கேள்வியெழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், தேசிய அரசு தொடர்வதற்கானஎந்தவொருபத்திரமும், அத்தாட்சியும் வழங்கப் படவில்லை. – என்றார்.

இதன்போது குறுக்கிட்ட கம்மன்பில எம்.பி, அமைச்சுப் பதவிகளுக்கு மக்களின் பணமேசெலவிடப்படுகிறது. மக்களின் பணத்தை இவ்வாறு விரயமாக்க முடியாது. சட்டப்படி தேசிய அரசு செல்லுப்படியாகாது. – என்றார்.

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரயில் நிலையத்தில் இருந்து நேற்று அதிகாலை ஆரம்பமாகவிருந்த 9 ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அறிக்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்று ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கருத்தால் நேற்றுச் சபையில் கடும்சொற்போர்மூண்டதுடன், நாடாளுமன்றத்துக்குப்பொய்ச் சாட்சியம் வழங்கியமைக்காக ஜனாதிபதியும், அவரின் செயலாளரும் பொறுப்புக்கூற வேண்டுமென எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின.

மேற்படி அறிக்கையில் சில பக்கங்களை வெளியிட்டால் அவை குற்றவாளிகளுக்குச் சாதகமாகஅமையும்என்பதால் அவற்றை வெளியிடவில்லை என்றுஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற சு.க வின் பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தை மேற்கோள் காட்டி நேற்றுச் சபையில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன, முழுமையான அறிக்கையை வெளியிடாமல் அறிக்கையின் ஒரு பகுதியை மாத்திரம் வைத்துக் கொண்டு எவ்வாறு விவாதிக்க முடியும்? முழுமையான அறிக்கையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை யெடுக்கவேண்டும். – என்றார்.

ஜனாதிபதி வழங்கியுள்ள அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாவிடின் எதற்கு விவாதத்தைக் கோருகின்றீர்கள்? பக்கம் குறைந்தால் விவாதம் தேவையில்லையா என சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல கிண்டலடித்தார்.

பந்துல எம்.பியின் கருத்துக்குப்பதிலளித்த சபாநாயகர், இந்தவிடயம்தொடர்பில்இன்று (நேற்று) காலைபலர்கேட்டனர். அதன் பின்னர் ஜனாதிபதியின் செயலாளருடன் நான் தொடர்பு கொண்டு வினவினேன். அறிக்கை தயாரிக்கும் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற சாட்சியங்களில் பல இரகசிய தன்மைகள் உள்ளன. அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தேவையுள்ளது. அத்துடன், அறிக்கையின் ஏனைய மூன்று பாகங்கள் அச்சிடப்படுவதற்காகஅரசஅச்சகர் நாயகத்திடம் உள்ளன. சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் ஏனைய பக்கங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கையெடுக்கப்படும் என்று கூறினார் எனச்சபாநாயகர்தெரிவித்தார்.

இதன்போது எழுந்த அநுர குமாரதிஸாநாயக்க எம்.பி, தமக்கு ஜனாதிபதி செயலாளரால் பெற்றுக்கொடுக்கப்பட்ட அறிக்கையையே உறுப்பினர்களுக்கு வழங்கியதாக சபாநாயகர் நேற்று கூறினார். அந்தஅறிக்கையில்பக்கங்கள் குறைவடைந்தால் அதற்கு ஜனாதிபதியின் செயலாளரும் ஜனாதிபதியும்தான் பொறுப்பு என நாங்கள் எடுத்துரைத்திருந்தோம். அவ்வாறே இன்று அறிக்கையின் சில பக்கங்கள் குறைவடைந்துள்ளன. அதற்கு ஜனாதிபதியும், அவரின் செயலாளருமேபொறுப்பாகும். நாடாளுமன்றத்திற்குப்பொய்ச் சாட்சியம் வழங்கிய ஜனாதிபதியின் செயலாளரை உடனடியாக அழைத்து இந்த விடயம் தொடர்பில் உரிய பதிலை பெற்றுக்கொள்ளவேண்டும். பொய்ச் சாட்சியம் வழங்கியமைக்கு ஜனாதிபதியும், அவரின் செயலாளரும் பொறுப்பாகும். – என்றார்.

அதேபோல், தினேஷ் குணவர்தன மற்றும் கயந்த கஜதீர எம்.பிக்களும் அறிக்கையை முழுமையாகப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

அப்போது சபைக்கு வருகைதந்த அமைச்சர் மஹிந்த அமரவீர, பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைக்கும் வகையில், அறிக்கையை எந்தவொரு அரசியல்வாதிக்கும்வழங்கவில்லை என்ற உத்தரவாதத்தை வழங்க முடியும், சில பக்கங்களைப் பெற்றுக்கொடுத்தால் வழக்குத் தாக்கல் செய்யும் போது அது சிலருக்குச் சாதகமாக அமையும் சந்தர்ப்பம் காணப்படுகிறது. எதனையும் மறைக்காது ஜனாதிபதியின் செயலாளர் குறித்த அறிக்கையை நாடாளுமன்றத்திற்கு பெற்றுக்கொடுப்பார். – என்றார்.

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) திபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் தொடர்பில் எதிர்வரும் பெப்ரவரி 20,21ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில்விவாதம்நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

இந்த இரண்டு அறிக்கைகளையும்சபைக்கு ஆற்றுப்படுத்துவதுதொடர்பில்அடுத்தவாரம் ஜனாதிபதி அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து கலந்துரையாடத்தீர்மானித்துள்ளார் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அடுத்தநாடாளுமன்றஅமர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி நடத்தப்படும் என்றும், அந்த தினத்தில் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் புதிய ஒழுக்கக் கோவைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பில் விவாதிக்கப்படும்என்றும்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சபா நாயகர் கூறியுள்ளார்.

## பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

பிரதமர்ரணில்விக்கிரமசிங்க கடந்த2015ஆம்ஆண்டுநாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன்பிணைமுறிவிவகாரத்தில் எவ்விதத்திலும் தொடர்புபடவில்லை என உறுதியாகக் கூறியிருந்தார்.

ஆனால் பிணைமுறி விவகாரம் குறித்து அண்மையில் வெளியான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் சட்டவிரோதமான முறையில் தனது பதவியைத் துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறாயின், பிரதமர் ரணில் நாடாளுமன்றத்துக்குப் பொய் கூறியுள்ளார். நாட்டின் உயரிய சபையான நாடாளுமன்றத்தில்போலியானகூற்றை முன்வைத்த பிரதமர் தானாகப் பதவி விலகக் கடமைப்பட்டுள்ளார்.

அவ்வாறு அவர் பதவி விலக மறுத்தால், பிரதமரை அந்த உயரிய பதவியிலிருந்து விலக்கும் பெரும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது. – என்றார்.

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழ்ப்பாணம்பண்ணைப்பகுதியில் நின்றிருந்த போது இனந்தெரியாத நபர்களினால் நீண்ட நேரம் தடுத்து வைக் கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு,தாக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

இதன்போது அவர் வசம் இருந்த தேர்தல் பிரசுரங்களும் பறிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத்தகவல்கொடுக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு உடன் வருகைதந்த பொலிஸார் உதயசிறியை மீட்டமையுடன் மேற்படி தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் நான்கு பேரையும் கைது செய்துள்ளனர்.

## ஊழலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யல்வாதிகளே காரணம் எனக் குறிப்பிட்ட அவர், தூய அரசியலுக்கான பொறுப்பை தனது பதவிக்காலத்தில் முழுமையாக நிறைவேற்றுவார் என்றார்.

நேற்றுபொலன்னறுவைபகமூன பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்

பக்கம் 03 >>>

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இருந்த ஈ.பி.ஆர்.எல். எவ்வின் செயலாளரான சிவசக்தி ஆனந்தன்கிளப்பிவிட்டசர்ச்சை குறித்து பேச்சுத் திரும்பியது.

சிவசக்தி ஆனந்தன் வெளியிட்ட கருத்துக் குறித்து அவர் கண்டிப்பார்எனஎதிர்பார்த்தேன். ஆனால், சிவசக்திஆனந்தனின் கருத்தை ஒட்டியே அவரும் கருத்து வெளியிட்டார்.

*"வழமையாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படுகின்ற நிதிக்கு மேலதிகமாக – ஏனைய 210 எம்.பிமாருக்கும் வழங்கப்படாத – நிதி ஒதுக்கீடு எங்கள் எம்.பிமார் 15 பேருக்கு வழங்கப்பட்டிருக்குமானால், அது 'அரசியல் லஞ்சம்' வகையறாவைச் சேர்ந்ததுதான். அதில் சந்தேகம் இல்லை.*

*வரவு – செலவுத்திட்டத்துக்கு ஆதரவாகக் கையை உயர்த்துவதற்குத்தான் இந்த ஒதுக்கீடு என்றால், அப்படிக் கையை உயர்த்தும் வேலைக்குப் பேரம் பேசப் போய், ஆகத் தனித் தனியே இரண்டுகோடிரூபாநிதி ஒதுக்கீட்டையா பேரமாகப் பேச வேண்டும்?*

*இன்றைய நிலையில் –*

*அரசியல் கைதிகள் விடயத்தையோ, அல்லது காணி விடுவிப்பு விவகாரத்தையோ, அல்லது காணாமல்போனோர் விவகாரத்தை ஒட்டியோ, காத்திரமான ஒரு விடயத்தை ஒரு முன் நிபந்தனையாக, பேரத்துக்கான அடிப்படையாக – விவகாரமாக – நமது தலைவர்கள் வைத்திருக்கலாமே...?*

*அதைவிட்டுவிட்டு, தலா வெறும் 2 கோடி ரூபா ஒதுக்கீட்டைப் பெறுவது சாதாரண பிச்சைச் சம்பளம் வேண்டியது போன்றதுதான்.*

*வரவு – செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்குப் பதிலாக, குறைந்த பட்சம் அரசியல் கைதிகள் விடுதலையை யாவது, ஒரு நிபந்தனையை விதித்து, அதனைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்.*

*நல்லவாய்ப்பைத்தமது அற்பத்தனமான அணுகுமுறை மூலம் கோட்டை விட்டு விட்டார்கள்நமது கூட்டமைப்பினர்."* – என்று பொருமினார் அந்தப் பிரமுகர்.

தமது கூட்டமைப்பு சகபாடி எழுப்பும்இத்தகையகேள்விக்கு சுமந்திரனும், அவரது சகாக்களும்பதில்கொடுக்கக்கடமைப்பட்டவர்கள்.

– மின்னல் –

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலஞ்சக் குற்றச்சாட்டை அடுத்து ஓலமிடுவோர் 'கழிவு ஒயில்' பிரச்சினைக்கு மௌனம் சாதித்தமை ஏன்?

## பழைய விவகாரத்தைப் போட்டுடைக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம்,ஜன.25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது இலஞ்ச குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட பின்னர் நொந்துபோய் மாறிமாறி கருத்துக்களை வெளியிடுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுன்னாகம் கழிவு ஒயில் பிரச்சினையின்போது வாய் திறக்காமல்இருந்ததற்கானகாரணம் என்ன?

அந்த கழிவு எண்ணெய் கலப்புக்கு காரணமான நிறுவனத்தை கொண்டுவந் தவரே அந்தப் பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் தான். ஆகையால் தான் அந்த விடயம் தொடர்பில் அவர்கள் மௌனம் காத்தார்களா? இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின்தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.



யாழ் ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பிலேயே சுரேஷ் பிறேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்–

தற்போது உள்ளூராட்சி தேர்தலைமையமாக வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு பொய் கூற ஆரம்பித்துள்ளனர். அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தாம் தான் காரணம் எனவும், காணி விடுவிப்பும்தம்மால்தான்நடைபெறுகின்றது எனவும் கூறி வருகின்றனர்.

எனினும், அரசியல் கைதிகளுடையவிடுதலைக்கூட்டமைப்பின் அழுத்தத்தால் இடம்பெறவில்லை. வழமையாக எவ்வாறு ஒரு கைதி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு விடுதலை செய்யப்படுகின்றாரோ அவ்வாறே விடுதலை செய்யப்படுகின்றனர். இப்போதும் இராணுவத்தின் வசம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் உள்ளன.

இந்த நிலையில், வழமை போன்று கூட்டமைப்பினர் மக்கள் முன்புபொய் கூற ஆரம்பித்துள்ளனர். இது தொடர்பில் மக்கள்விழிப்புணர்வுடன்இருக்க வேண்டும். உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் யாழ் மாநகர சபைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனமும் மக்களை ஏமாற்றும் வகையிலேயே உள்ளது.

யாழ்.மாநகரசபையை பழைய இடத்திலேயே கட்டவுள்ளதாக கூறியிருக்கின்றார்கள். இது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்று. யார் ஆட்சிக்கு வந்தாலும் பழைய இடத்தில் யாழ்.மாநகர சபை கட்டப்படத்தான் போகின்றது.

இவ்வாறான நிலையில் அவர்கள் வெளியிட்டுள்ள விடயங்கள்நகைப்புக்குரியதாகவே இருக்கின்றன.

முக்கியமாக ஒரு விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். தற்போது இலஞ்ச குற்றாச்சாட்டு முன்வைக்கப்பட்டபின்னர் மாறி மாறிக் கருத்துக்களைக் கூறி வருகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுன்னாகம் கழிவு எண்ணெய்ப் பிரச்சினையின் போது எவருமே வாய் திறக்காமைக்கான காரணம் என்ன?

மக்கள் போராட்டங்களை முன்னெடுத்தபோது நாமும் அதில் கலந்துகொண்டிருந்தோம். அதற்கு எதிராகக் குரல் கொடுத்திருக்கின்றோம். ஆனால் கூட்டமைப்பினர் அந்த விடயத்தில் மௌனமே சாதித்தார்கள்.

ஏனெனில்அந்தஎண்ணெய் கலப்புக்குக் காரணமான நிறுவனம் வடக்கிற்கு வருவதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரே மூல காரணம் ஆகையால் தான் ஒருவரும் ஒன்றும்பேசவில்லை– என்றார். (இ–7)

## அழிவடைந்த நிலையில் உள்ள வளலாய்ப் பகுதி நெசவுசாலை

### மீளச் செயற்பட நடவடிக்கை எடுக்குக

அச்சுவேலி,ஜன.25

அச்சுவேலி, வளலாய் பகுதியில் கடந்த பல வருடங்களாக அழிவடைந்த நிலையில் காணப்படும் நெசவுசாலையைப் புனரமைத்து அதனை மீள இயங்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னர் இயங்கி வந்த மேற்படி நெசவுசாலை நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழ்நிலை காரணமாக அதன் செயற்பாடுகள் தடைப்பட்டன.

தற்போது அந்தப் பகுயில் பற்றைகள் சூழ்ந்தும் ஆங்காங்கே கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டும் காணப்படுகின்றது. இதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதுடன் நோய் பரவும் ஆபத்து நிலையும் தென்படுகிறது என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, மேற்படி நெசவுசாலையை மீளப் புனரமைப்புச் செய்து அது இயங்குவதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (இ)

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ். நகரில் நாளை ஆரம்பம்

### முதல்நாள் நிகழ்வில் பிரதம விருந்தினர் முதலமைச்சர் விக்கி

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ். வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் ஒழுங்கமைப்பில் 9 ஆவது யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நாளை 26 ஆம் திகதி முதல், 27ஆம், 28ஆம் திகதி வரை 3 தினங்கள் யாழ்.மாநகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து சுமார் 300 நிறுவனங்கள் தங்கள் பொருள்களைக் காட்சிப்படுத்த உள்ளன என்று யாழ்.வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் கே.விக்னேஸ் கூறியுள்ளார்.

இந்த வர்த்தகக் கண்காட்சி தொடர்பாக யாழ்.நகரில் உள்ள விடுதி ஒன்றில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் விளக்குகையில்–

கடந்த 2010ஆம் ஆண்டு யாழ். சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 8 ஆண்டுகள் நடைபெற்று 9ஆவது வர்த்தகக் கண்காட்சி இம்முறை நடைபெறுகிறது.



இக்கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். 26ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் கண்காட்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து யாழ். மாநகரசபை மைதானத்தில் கண்காட்சிநடைபெறும். இக்கண்காட்சிக்கு மாணவர்களுக்கு இலவசமாகவும் ஏனையவர்களுக்கு நுழைவுக் கட்டணமாக நாற்பது ருபாவும் அறிவிடப்படவுள்ளது. மேலும் இக் கண்காட்சியில் 300இற்கும் மேற்பட் நிறுவனங்கள் தங்கள் காட்சிக் கூடங்களை அமைக்கவுள்ளன.

மேலும் இந்தியாவில் இருந்து 75 நிறுவனங்கள் இந்தக் கண்காட்சியில் கலந்துகொள்கின்றன. இதன் ஊடாக கடந்த காலத்தைபோல் மக்கள் பல்வேறு நன்மைகளை அடைவார்கள். கடந்த காலத்தில் மக்கள் இந்தக் கண்காட்சியில் பங்கெடுத்திருந்த நிறுவனங்களுடன் இணைந்து தங்கள் தொழிலை ஆரம்பித்தார்கள்.

அதேபோல் பலர் தங்கள் தொழிலுக்கான உபகரணங்களைப் பெற்றார்கள். இவ்வாறு பல்வேறு நன்மைகள் கிடைக்கப்பெற்றன. எனவே, கடந்த காலத்தைவிடவும் இம்முறை சிறப்பானகண்காட்சியாகஅமையும்– என்றார். (இ.7)

## வடக்கு மாகாண சபையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதே இக் கண்காட்சி

### வர்த்தக தொழிற்றுறை மன்றத் தலைவர் கூறுகிறார்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம்,ஜன.25

வடமாகாண சபையை வலுப்படுத்தும் நோக்காகக் கொண்டதே யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சியாகும். அதனாலேயேவடமாகாணமுதலமைச்சர்சி.வீ.விக்னேஸ்வரனை பிரதமவிருந்தினராக அழைத்திருக்கிறோம். இந்த சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 8 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பது அனைவருக்கும் தெரிந்தது என்று யாழ்.வர்த்தகதொழிற்றுறை மன்றத்தின் தலைவர் கே.விக்னேஸ் கூறினார்.

யாழ்.வர்த்தகதொழிற்றுறை மன்றத்தினால் யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சிஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்தக்கண்காட்சிதொடர்பாகதம்முடன் ஒன்றும்பேசப்படவில்லை என மாகாண தொழிற்றுறை அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி கூறியிருந்தார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற யாழ்ப்பாண கைத்தொழில் துறைமன்றம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சருடைய இந்தக் கூற்று தொடர்பாக கேட்டபோதே வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார். இதன்போது மேலும் அவர் கூறுகையில்–

அரசியல் கட்சிகள் சார்ந்துஅல்லது தனிநபர் சார்ந்து இந்தக் கண்காட்சி நடத்தப்படவில்லை. வடமாகாண சபையை வலுப்படுத்துவதே இதன் நோக்கம். அதனாலேயே வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை பிரதமவிருந்தினராக அழைத்திருக்கின்றோம். எனவே, வடமாகாண சபை பலவீனப்படுத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை. மேலும் தென்பகுதி அரசியல்வாதிகளின் தலையீடும் இதற்குள் இல்லை.

எங்கள் பகுதியைச் சேர்ந்த சகல அரசியல்வாதிகளுக்கும் நாங்கள் அழைப்புவிடுத்திருக்கின்றோம். எனவே இந்த நிகழ்வு 8 வருடங்களாக நடைபெறும் நிகழ்வு. இம் முறை ஒன்பதாவது தடவையாக இடம்பெறுகின்றது. இதுவும் அனைவருக்கும் தெரியும்– என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா மாகாண முதல்வரால் நாட்டுக்கு பெரும் அபகீர்த்தி

## பாதிக்கப்பட்ட அதிபருக்கு நியாயம் வேண்டும் கூட்டமைப்பு நேற்று சபையில் வலியுறுத்தல்



கொழும்பு, ஜன .25

ஊவா மாகாண முதல்வர், பதுளை தமிழ் மகளிர் வித்தியாலயத்தின் பெண் அதிபரை முழந்தாளிட வைத்ததுமாகாணத்துக்கு மாத்திரமல்ல உலகளாவிய ரீதியில் நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளார். அவரின் கல்வி அமைச்சைப் பறித்தமை வரவேற்கக் கூடியதாகவுள்ளபோதிலும், பெண் அதிபருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க ஜனாதிபதியும் துறைசாந்தவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்என்றுதமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடற்றொழில்கள் திருத்தச் சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் சிறிதரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையகப் பகுதியில் கடும்வறுமைக்கும்கஷ்டத்துக்கும் மத்தியில்தான் படித்து ஒருவர் அதிபராக வர வேண்டும். இவ்வாறான சூழலில் பதுளை தமிழ் மகளிர் வித்தியாலயத்தின் பெண் அதிபர் பவானியை ஊவா முதல்வர் வீட்டுக்கு அழைத்து முழந்தாளிடச் செய்துள்ளார். இது நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயற்பாடாகும். நேற்று (நேற்று முன்தினம்) நாடாளுமன்றத்திலும் அந்தப் பெண் கண்ணீர் சிந்தித் தமக்கு நேர்ந்த கொடுமையை விவரித்திருந்தார்.

முதல்வரின் செயற்பாடுகள் குறித்து கடும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியும், துறை சார்ந்தவர்களும் இவருக்கு உரிய நடவடிக்கை எடுத்து நீதியை நிலைநாட்ட வேண்டும். – என்றார்.

## கூட்டமைப்பு வேட்பாளருக்கு எதிராக அனந்தி முறைப்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவருக்கு எதிராக அக் கட்சியின் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கூட்டமைப்பின் சார்பில் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு எதிராகவே வட்டுக்கோட்டைபொலிஸில்அவர் முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இந்தவேட்பாளர்அவரது முகநூலில் கீழ்த்தரமான முறையில் தன்னை விமர்சித்துள்ளார் எனக் குற்றஞ்சாட்டியே அவருக்கு எதிராக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த முறைப்பாட்டை அனந்தி செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டையடுத்துமேற்படிவேட்பாளர் தரப்பில் சமரசம் செய்வதற்கு முயற்சிக்கப்பட்டபோதும் அதனை அமைச்சர் நிராகரித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் நேற்று பொலிஸார் அந்த வேட்பாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அந்த வேட்பாளர் ஒரு எம்.பி. சகிதம் பொலிஸ் நிலையம் சென்றார் எனக் கூறப்பட்டது.





**மகா சிவராத்திரியை யொட்டிய தென்இந்திய யாத்திரை**

ஆரம்பம் 10.02.2018 நாள்கள் : 6

**தரிசிக்கும் இடங்கள்:**

திருப்பதி. அலமேலு மங்கா. காளகஸ்திரி. திருத்தணி. திருவெண்ணாமலை. பொற்கோவில். வடபழனி. கபாலீஸ்வரர். ஆறுபடை முருகன் (ஒரே இடத்தில்) அஷ்டலெட்சுமி. மேல் மருவத்தூர். காஞ்சிக்காமாட்சி. ஏகாம்பரேஸ்வரர். வரதராஜப்பெருமாள் உட்பட பல்வேறு ஆலயங்களும் தரிசிக்கலாம். சென்னையில் ஒரு நாள் சொப்பிங் விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்க. (சிவராத்திரி விரதம் திருவெண்ணாமலையில் ஏற்பாடு செய்யப்படும்)

**பெற்றுக் கொள்ளும் ஞாயிற்று எமது சேவை:**

இருவழி விமானடிக்கட். AC வாகனவசதி. மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு. குடிநீர். 2பேருக்கு கட்டில் மெத்தை. வெஸ்டர்ன் கொமட். குளியலறை இணைந்த அறைகள். ரொப்பி ரீ மேலும் யாழ்.கொழும்பு யாழ் வாகன வசதி ஒழுங்கு செய்து தரப்படும். விருப்பமுடையவர்கள் மேலும் விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

யாழ். கொழும்பு வரவும் போகவும் இலவசமான வாகன ஒழுங்கு செய்து தரப்படும்.

கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102/ 077 736 2154



**ஏழாலை தெற்கு வசந்தபுரம் களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம்**



ஏழாலை தெற்கு வசந்தபுரம் களபாவோடை அருள்மிகு வசந்த நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

**விசேட உற்சவங்களான -**

**1. வேட்டைத் திருவிழா - 28.01.2018 ஞாயிற்றுக்கிழமை**

**2. சப்பைரதத் திருவிழா - 29.01.2018 திங்கட்கிழமை**

**3. தீர்த்தத் திருவிழா - 31.01.2018 புதன்கிழமை**

**என்பன ஓம். ரி.வியில் நிகழ்வுகளாக ஒளிபரப்பாகும்.**

**30.01.2018 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா**

**ஓம். ரி.வி. இல் நேரலையாக ஒளிபரப்பாகும்.**

**என்பதனை அடியவர்களுக்கு அறியத் தருகின்றோம்**

**"அன்னையின் திருவருள் பாரெங்கும்**

**பொங்கிப் பொலிவதாக...!**



இங்ஙனம்
அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.